

வானமாமலை ஜீயர்ஸ்வாமி ஆழ்வார் திருநகரி நம்மாழ்வாரை
மங்களாசாஸனம் செய்யும் காட்சி.



# கீதாசார்யன்-31



தொகுதி 3 | துர்மதி ௵ | சித்திரை ௴ | ஏப்ரல் 81 | பகுதி 7



ஆசிரியர்:

M. A வேங்கடகிருஷ்ணன், M A., M Phil.


**இயக்குநர் குழு !**

T. C. A ராமாநுஜம்
M.A. B.L., I.R.S. (தலைவர்)
N கணபதி
விற்பனை இயக்குநர்
R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்
P. T ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு !**

சாண்டில்யன் (தலைவர்
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V. ராமாநுஜம்
S. வேங்கடகிருஷ்ண
பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்



7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ்விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரு. 12/-



ஸ்ரீமத் பரமஹம்ஸ, வானமாமலைமடம்
28-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமி

# திக்கெட்டும் பரவட்டும்!



இந்தச் சித்திரை மாதம் அச்வினி நக்ஷத்திரத்தன்று (3-5-81) தற்போது வானமாமலை ஜீயர் ஸ்தானத்தை அலங்கரித்தருளா நிற்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி 28 வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமிக்கு 80 திருநக்ஷத்ரங்கள் பூர்த்தியாகின்றன. அதனை முன்னிட்டு இவ்விதழை சிறப்பு மலராக்கி, ஸ்வாமி திருவடித் தாமரைகளில் ஸமர்ப்பிக்கிறோம்.

சதாபிஷேக விழா கண்டருளும் இந்த நன்னாளில், வைணவர்களனைவருடைய சார்பிலும் ஒரு விண்ணப்பம் செய்கிறோம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை பாரத தேசம் முழுவதும் பரப்புவதில் பெரும்பங்கு ஆற்றியுள்ளது வானமாமலை மடம். இமயம் முதல் குமரி வரை கணக்கிலடங்காத சிஷ்யர்கள் இம்மடத்திற்குள்ளதே இதற்குச் சான்று. பாரத தேசத்தின் முதல் ஜனாதிபதியான திரு. ராஜேந்திரப்ரஸாத் அவர்கள் கூட வானமாமலை மடத்தின் சிடர்தான்.

அவ்வப்பொழுது இம்மடத்தை அலங்கரித்த ஜீயர் ஸ்வாமிகள், சிஷ்யர்களை அனுக்ரஹிக்கும் வண்ணம் பாரத தேசம் முழுவதும் திக்விஜயம் செய்வார்கள். ஆனால் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் திக்விஜயம் செய்தருளாததால் ஆங்காங்கே உள்ள சிஷ்யர்கள் நம் ஸம்ப்ரதாயத்தை விட்டு நழுவும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

நமது ஸம்ப்ரதாயம் திக்கெட்டும் பரவ வேண்டுமானால், அல்லது ஏற்கனவே பரவியுள்ள நமது ஸம்ப்ரதாயத்தை நிலை நாட்ட வேண்டுமானால் நமது ஜீயர் ஸ்வாமி அவசியம் ஒரு திக்விஜயத்தை மேற்கொள்ள வேணுமென்று பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

# ஜீயர் திருவடிகளே சரணம்

**ஸ்ரீ வைஷ்ணவச் சீமான்கள்:** ஸம்ஸ்கிருத மொழியில் ஸ்ரீமான் என்று ஒரு சொல் வழங்கப்படுகிறது. இச்சொல் ஸ்ரீய: பதியான எம்பெருமானைக் குறிக்கும். செல்வம் பெற்றிருக்கும் செல்வந்தனையும் குறிக்கும். நீங்கும் செல்வம், நீங்காத செல்வம் என்று செல்வம் இருவகைப் படும். வீடு, நிலம் முதலியவை நீங்கும் செல்வம்; பகவானுக்குச் செய்யும் வழுவிலா அடிமையே நீங்காத செல்வம். இம்மையிலும் மறுமையிலும் இன்பமளிக்கும் செல்வம் 'கைங்கர்யம்' ஒன்றே. இப்படிப்பட்ட செல்வத்தை ஆசாரியர்கள் ஸ்ரீ வைஷ்ணவ உலகினுக்கே உரிய செல்வமாகக் கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். இத்துடன் மிகவும் பெருமை பெற்ற குரு பரம்பரையையும் பெற்றிருக்கிறோம். 'லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாத

# ஸ்தலசயனத்துறைவார்

யாமுன மத்யமாம் | அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் || என்று நாள்தோறும் அநுஸந்திக்கிறோம். இராமாநுசனடியார்கள் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே ஏற்பட்ட தனிப் பெருமையாகும்.

ஸ்ரீ அழகிய மணவாளனையும் ஈர்க்கும் ஆத்ம குணங்களும், தெளிந்த ஞானமும், ஆசாரிய லக்ஷணங்களும் பூர்ணமாகக் கொண்டு விசதவாக் 'சிகாமணியாக விளங்கிய மணவாள மாமுனிகளை ஆசாரியராகப் பெற்று இப்போதும் "நம் மணவாள மாமுனிகள்' என்று கொண்டாடும் பாக்யம் (நமக்கே) உரியதாக உள்ளது. இவ்வாறு கைங்கர்யம், குருபரம்பரா பிரபாவம், ஸதாசார்ய ஸம்பந்தம் ஆகிய மூவகைச் செல்வங்களையும் பெற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களே ஸ்ரீமான்கள்.

**ஸ்ரீ வைஷ்ணவக் காவலர்கள் :** ஸ்ரீ வைஷ்ணவம் பகவானைப் போன்றது; அழிவில்லாதது; என்றும் இருப்பது. பல்லாண்டுகளாகப் பல ஆசாரியர்களால் ஓரான் வழியாகக் காப்பாற்றப்பட்டும் இது மென்னடை கொண்ட முன்னேற்றத்துடன் வளர்ந்து வந்தது. எம்பெருமானார் (ஸ்ரீ ராமாநுஜர்) காலத்தில் இந்த ஸ்ரீ வைஷ்ணவம் கிளர்ந்தெழுந்து இமவந்தம் தொடங்கி இருங்கடலளவும் தழைத்து வேரூன்றத் தொடங்கியது; 'எம்பெருமானார் தரிசனம்' என்று பெயர் பெற்றது. க்ருபாமாத்ர ப்ரஸந்நாசாரியரான நம் இராமாநுசர் பரந்து வளர்ந்து வரும் ஸ்ரீ வைஷ்ணவத்தை வரம்புக்கு உட்பட்டு நேரிய வழியில் ரக்ஷிப்பதற்காகத் தம் திருவடிகளில் ஆச்ரயித்தவர்களுள் எழுபத்து நான்கு மகான்களைக் கொண்டு எழுபத்து நான்கு ஸிம்ஹாஸனாதிபதிகள் என்ற ஓரமைப்பை ஏற்படுத்தினார்.

அந்த அமைப்பு, பல நூற்றாண்டுகள் நன்கு செயல்பட்டது என்றாலும், காலப்போக்கில் அந்த மகான்களில் சிலரது பரம்பரைகள் மறைந்து விட்டன. எம்பெருமானாரின் மறு அவதாரமாகிய நம் மணவாள மாமுனிகள் எம்பெருமானார் தரிசனம் நிலைத்து நிற்கச் செய்யும் வழியை ஆராய்ந்தார். தம் திருவடிகளில் ஆச்ரயித்த மகான்களுள் எண்மரைக் கொண்டு ஓரமைப்பை ஏற்படுத்தி அவர்களுக்கு அஷ்டதிக்கஜாசாரியர்கள் என்ற பெருமையை ஏற்படுத்தினார். அவர்களுள் முதல்வர் வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி என்று கூறப்படுகிறார்.

**வானமாமலை மடத்தின் தனிப் பெருமை :** வடதேசங்களில் சென்று எம்பெருமானார் தரிசனத்தை நிலை நாட்டி வரும்படி மணவாள மாமுனிகள் வானமாமலை ஜீயரை நியமித்திருந்தார். மாமுனிகள் தமது அந்திம தசையில், தம் திருக்கையில் தரித்திருந்த த்ரிதண்டத்தில் உபதண்டத்

தையும், தம் திருக்கையில் தரித்திருந்த கணையாழியையும் (மோதிரத்தையும்) திருவாய்மொழிப் பிள்ளையின் திருவடி நிலைகளையும் வானமாமலை ஜீயரிடம் கொடுத்தருள வேணு மென்று அருகில் இருக்கும் நாயனாரை பிரார்த்தித்து அருள, இம்மூன்றும் வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கு கிடைத்தன. இன்றளவும் இப்பரிசுகள் வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளுக்கு கிடைத்து வருகின்றன. இப்போது எழுந்தருளியுள்ள வானமாமலை ஸ்ரீ சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருக்கைகளை அலங்கரிக்கும் த்ரிதண்டத்தில் உபதண்டமும், கணையாழியும் மணவாள மாமுனிகள் சாத்திக் கொண்டிருந்தவையே என்பதை நினைக்கும்போது ஒவ்வொருவருக்கும் மெய்சிலிர்க்கும் என்பதில் ஐயமில்லை. இத்தனிப் பெருமை வானமாமலை மடத்திற்கே உரியதாக விளங்குகிறது.

**இராமாநுச முனி** எனப் பெயர் பெற்ற காரணம் ; இளையாழ்வார் ஸந்யாஸம் பெற்றதும் தேவப்பெருமாள் இவருக்கு 'ராமாநுஜமுனி' என்று திருநாமம் சாற்றினார் (பெயரிட்டு அழைத்தார்). முதல் வானமாமலை ஜீயர் ஸ்வாமிக்கு பூர்வாச்ரமத்தில் அழகிய வரதர் என்று திருநாமம். அவர் ஸந்யாஸம் பெற்று தெய்வ நாயகன் திருவடிகளை ஸேவித்து நின்றார். அப்போது வானமாமலைப் பெருமாள் ஜீயரை, வானமாமலை ராமாநுஜ முனியே! என்றழைத்து, 'ஸ்ரீரங்கத்தில் ராமாநுஜர் நம்பெருமாளின் எல்லாக் கைங்கர்யங்களையும் நிர்வஹித்து வந்தது போல், நீரும் நமது (இப்படை வீட்டில்) வானமாமலையில் எல்லாக் கைங்கரியங்களையும் நிர்வஹித்து வாரும்' என்று நியமித்தார். எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களையும் அழைத்து ராமாநுஜ ஜீயரின் திருவடிகளை ஆச்ரயிக்குமாறும் நியமித்தருளினார். அந்நாள் முதல் வானமாமலை ஜீயர், வானமாமலை ராமாநுஜ ஜீயராக ஆனார். இப்போதும் வானமாமலை ஜீயர்

ஸ்வாமிகள் வானமாமலை ராமாநுஜ ஜீயர் என்று அழைக்கப் படுகிறார்கள்.

**பொன்னடிக்கால் ஜீயர்:** வானமாமலை மடத்தின் முதல் ஸ்வாமிக்கு 'பொன்னடிக்கால் ஜீயர்' என்று ஒரு திருநாமம். மணவாள மாமுனிகளின் திருவடி.

ஒருமுறை ஸ்ரீரங்கத்திலுள்ள நம்பெருமாள் கந்தாடையாண்டான் கனவில் தோன்றினார். கந்தாடையாண்டானுக்கு மணவாள மாமுனிகளிடம் விசேஷபக்தி ஏற்படுத்த விரும்பினார். ராமாநுஜரும் முதலியாண்டானுமாக ஸேவை ஸாதித்தார். அதுபோல் திருவேங்கடமுடையானும் பெரியகேள்வி ஜீயரின் கனவில் எழுந்தருளினார். திருமலையில் மேலைக்கோடி முதல் கீழைக்கோடி வரை தெற்கு நோக்கி ஒருவர் படுத்திருப்பது போலவும், அவரது திருவடியருகில் திரிதண்ட காஷாயங்கள் அணிந்து ஒருவர் நிற்பது போலவும் ஸேவை ஸாதித்தார். ஒருவர் அங்கு வந்து செல்பவர்களை நோக்கி 'இவர் யார்?' என்று கேட்க, 'படுத்திருப்பவர் முப்பத்தாறாயிரப் பெருக்கர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்; இவரது திருவடி வாரத்தில் நிற்பவர் பொன்னடிக்கால் ஜீயர். என்று கூறினார்களாம். ஆதலால் மணவாள மாமுனிகள் திருவடிகளில் ஆச்ரயித்த வானமாமலை ராமாநுஜ ஜீயரே பொன்னடிக்கால் ஜீயர் எனப்படுகிறார். இவர் மணவாள மாமுனிகளின் பாத ரேகை போல் இருந்து கொண்டு ஆசார்ய கைங்கரியம் செய்தவர் என்று பெருமையுடன் கூறப்படுகிறார். மணவாளமாமுனிகள், தானே இவருக்கு ஆசார்ய பீடத்தை அளித்து, தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு ஸமாச்ரயணம் செய்யும் அதிகாரத்தையும் தந்தருளினார்.

'ரம்ய ஜாமாத்ருயோகீந்த்ர பாதரேகா மயம் ஸதா, ததாயத்தாத்மஸத்தாஹம் ராமாநுஜமுநிம் பஜே' என்ற ச்லோகம் இங்கு எப்போதும் அநுஸந்திக்கப் படுகிறது.

**அசுவினியும், இருபத்தெட்டும் :** இன்று வானமாமலை மடாதிபதியாக எழுந்தருளி இருக்கும் ஸ்வாமியின் திரு நக்ஷத்திரம் அசுவினி. நக்ஷத்திரத்தைச் சொல்லத் தொடங்கும் போது முதல் நக்ஷத்திரமாகவும், இரண்டாவது முறை தொடங்கும் போது 28ஆம் நக்ஷத்திரமாகவும் இருக்கிறது. இந்த நக்ஷத்திரத்தில் அவதரித்த இந்த ஸ்வாமி அலங்கரிக்கும் பட்டமும் இருபத்து எட்டாவது பட்டம்! மேலும் இந்த நூற்றாண்டின் ஆரம்ப வருடமான 1901ல் அவதரித்தவர் ஸ்வாமி. முதல் மாதமான சித்திரையில், முதல் நக்ஷத்திரமான அச்வினியில் அவதரித்தவர். இப்படி எல்லாவற்றிலும் முதலாயிருப்பவரும் நம் ஸ்வாமியே. பகவத் ஸங்கல்பத்தினுல் தானுகவே அமையும் அமைப்பு இப்படித்தான் சுவையுடையதாக இருக்கும்!

**வர்த்மான ஸ்வாமியின் பெருமைகள் :** இப்போது மடாதிபதியாக விளங்கும் ஸ்வாமி ஸ்ரீ வில்லிபுத்தூர் அருகில் இருக்கும் வடகரை என்னும் சிற்றூரில் அவதரித்தார். சின்னக்கலியன் ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்தவர். உபயவேதாந்த பாரங்கதராகிய இந்த ஸ்வாமி வடகரை, ஸ்ரீரங்கம், திருவல்லிக்கேணி முதலான இடங்களில் உள்ள வானமாமலை மடங்களின் பொறுப்புகளை ஏற்று கைங்கர்யம் செய்து கைங்கர்ய ஸ்ரீயுடன் விளங்கினவர். முதலில் ஸ்ரீரங்கத்திலும், பிறகு ஸ்ரீ பார்த்தஸாரதி ஸன்னிதியிலும் அத்யாபக கைங்கர்யம் செய்து எம்பெருமான்களின் திருவுள்ளத்தை உகப்பித்து இருக்கிறார். பற்பல திவ்யதேசங்களிலும் உபந்யாஸங்கள் செய்தருளியிருக்கிறார். இந்த ஸ்வாமிக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ துர்முகி வருஷம் சித்திரை மாத அசுவினி நக்ஷத்தில் சதாபிஷேக மஹோத்ஸவம் நடைபெற இருக்கிறது. ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி இருந்து ஸ்ரீ வைஷ்ணவ உலகு உஜ்ஜீவிக்க வழிகாட்ட ஸ்ரீயःபதியான ருக்மிணீ ஸமேத ஸ்ரீபார்த்த ஸாரதியும் ஸ்ரீவர மங்காஸமேத தெய்வ நாயகனும் அரங்க நகரப்பனும் அருள்புரிவார்களாக. ★

# இராமாயணச் சுவையமுதம்

"**இக்ஷ்வாகு வம்ச ப்ரபவ**" என்று தொடங்கி, [ஸத்யே தர்ம இவாபர:] என்னுமளவும் பன்னிரண்டு ச்லோகங்களில் பெருமானுடைய திருக் குணங்களைப் பரக்கச் சொல்லி, *(19)* *தமேவம் குண ஸம்பந்நம் ராமம் ஸத்ய பராக்ரமம் ..... ..... யௌவராஜ்யேந ஸம்யோக்து மைச்சத் ப்ரீத்யா மஹீபதி:* என்று தொடங்கி *(89)* *ராமஸ் ஸீதா மநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப் தவாந்* என்னுமளவும் மகுடாபிஷேக முயற்சி முதலாக, பட்டாபிஷேகத்தளவாக ராமாயண கதையை ஸம்க்ஷேபமாகச் சொல்லித் தலைக்கட்டி வான்மீகி முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு தேவலோகம் சென்று சேர்ந்தார் நாரதமுனிவர். ஸம்க்ஷேப ராமாயணத்தில் மற்றுமுள்ள சில ச்லோகங்களில் பொருட்சுவை கேளீர்.

**ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்**

**அண்ணங்கராசாரியர் ஸ்வாமி**

[''ஸ ஸத்யவசநாத் ராஜா தர்மபாசேந ஸம்யத:, விவாஸயாமாஸ ஸுதம் ராமம் தசரத: ப்ரியம்.] சக்ரவர்த்தி தம்முடைய ப்ரிய புத்ரனைக் காட்டுக்குப் போகவிட்டானென்று சொல்லுமிடத்தில் (ஸத்யவசநாத்) என்கிற ஹேதுநிர்தேச மொன்றே போதும். (தர்மபாசேந ஸம்யத:) என்கிற ஹேதுகர்ப்ப விசேஷணமுமிட்டது ஒரு சாஸ்த்ரார்த்தத்தைத் தெரிவிக்கைக்காகவாம். அதாவது, வியாகரணத்தில் ''யாப்யே பாசப்'' என்றொரு ஸூத்ரம். ''குத்ஸித: பிஷக்-பிஷக்பாச:'' என்பது இதற்கு உதாஹரணம். அதுபோல தர்மபாச மென்றது குத்ஸித தர்ம மென்றபடி; தர்மாபாஸ மென்றதாகத் தேறும். கைகேயி

யின் வரப்ரார்த்தனைக்குக் கட்டுப்பட்டு மன்னவன் மகனைக் காட்டுக்குப் போகவிட்டதாகக் கதை. கைகேயிக்கு அவன் வரம் கொடுத்திருந்தது எந்த யுகாந்தரத்திலோ தெரியாது. இன்னவிதமான வரம் என்று குறிப்பிடப் பட்டிருக்கவுமில்லை. அதுகிடக்க, இவ்வரசன் இராமனைத் தானாக வரவழைத்து 'நாளை உனக்கு மகுடாபிஷேகம்' என்று பலகால் சொன்னது நாடு நகரமும் நன்கறிந்தது. இங்ஙனே சொன்னதைத் தவறினவன் ஸத்யவாதியாக எங்ஙனம் ஆகமுடியும்?

இங்கு முக்கியமான விஷயம் ஒன்றே. *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்று-வடிவெடுத்த ஸித்த தர்மமாகச் சொல்லப்பட்ட இராமபிரானோடு கூடி வாழ்வதை விட்டு ஆபாஸ தர்மமான ஸத்யவசனத்தைத் தயரதன் பற்றி நின்றது அவனுக்கு அவத்யமாகவே சொல்லப் பட்டுள்ளது. முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தில் ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'' என்ற விடத்தில் பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி ''சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்குறுப்பு'' என்பதாம். இங்கு மணவாள மாமுனிகளின் வியாக்யான ஸ்ரீஸூக்தி வருமாறு—: ''முன்பே வரப்ரதானத்தைப் பண்ணிவைத்து இப்போதாக மறுக்க வொண்ணாதென்று ஆபாஸமான ஸத்ய தர்மத்தைப் பற்றிநின்று *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்கிற பெருமாளோடே கூடி வாழவிருந்த பேற்றையிழந்த சக்ரவர்த்தியைப் போலே'' என்று. இங்ஙனே ஆசாரியர்கள் நிர்வஹிப்பதற்கு மூலமாகவே இங்கு *தர்மபாசேந ஸம்யத:* என்றமைந்தது.

[''ஸ ஜகாம வநம் வீர: ப்ரதிஜ்ஞாமநுபாலயந், பிதுர் வசந நிர்தேசாத் கைகேய்யா: ப்ரியகாரணாத்''] பெருமான் காட்டுக் கெழுந்தருளினதற்கு இரண்டு காரணங்கள் இங்குச் சொல்லப் படுகின்றன. இரண்டும் முக்கிய காரணமென்று

கருதலாகாது. முற்படச் சொன்ன *பிதுர் வசந நிர்தேசாத்* என்னுங்காரணமே ப்ரபலமானது. ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களென்கிற நான்கு திருமூர்த்திகளாகத் திருவவதரித்ததற்குக் காரணமருளிச் செய்யும் நம் ஆசாரியர்கள், பெரியவர் சொல்லியவற்றைச் சிறியவர் செய்வதென்கிற ஸாமாந்ய தர்மத்தை அநுஷ்டித்தார் பெருமாள்; சேஷி விஷயத்தில் சேஷத்வமே ஸ்வரூபமென்கிற விசேஷ தர்மத்தை ஆசரித்துக் காட்டினார் இளைய பெருமாள்; அதுதன்னிலும் மிகச் சிறந்த பாரதந்திரியத்தை யநுஷ்டித்துக் காட்டினார் பரதாழ்வான்; பாகவத சேஷத்வமே பரமதர்மமென்பதை ஸ்வாநுஷ்டாந முகத்தாலே காட்டினான் சத்ருக்நாழ்வான் என்றருளிச் செய்தார்கள்.

பெருமாள் அநுஷ்ட்டித்த ஸாமாந்ய தர்மத்தை மூதலிக்குமிடத்து, *பிதுர் வசநநிர்தேசாத்—விச்வாமித்ரஸ்ய சாஸநாத்—அகஸ்த்ய வசநாத்—பரத்வாஜஸ்ய சாஸநாத்* இத்யாதி ப்ரமாணங்களைக் காட்டியருளுகிறார்கள். பெருமாள் செய்திருக்கிக்கிற காரியமெல்லாம் பெரியாருடைய நியமனத்தைச் சிரமேற்கொண்டே செய்ததாகக் காண்கிறது. முதற் காரியமான தாடகாவதத்தை யெடுத்துக் கொள்வோம். பெண்கொலை பெரும்பாதகமென்று உலகம் பகரும் இந்து இராமபிரானறியமாட்டாததன்றே. அறிந்திருந்தும் இதனைச் செய்தது [விச்வாமித்ரஸ்ய சாஸநாத்].

சிலர் சொல்வதுண்டு—சூர்ப்பணகைக்குச் செய்வித்த அங்கபங்கத்தைத் தாடகைக்குச் செய்திட்டு சூர்ப்பணகையை முடித்திருக்கலாமே. அவளை உயிரோடு விட்டதனாலல்லவோ அவள் இலங்கைக்கேகி இராவணனைத் தூண்டி ஸீதாபஹாரணம் முதலிய கஷ்டங்களை விளைத்தனள்; அவளுயிரையே மாய்த்திருந்தால் ஒருவருத்தமுமில்லையே என்று. இது வாஸ்தவமே. தாடகையை வதை செய்யுமாறு நியமிக்க அங்கு ஒரு முனிவர் இருந்தது போல, பஞ்ச

வடியில் சூர்ப்பணகையை வதை செய்யுமாறு நியமிக்க ஒரு முனிவர் வந்து நிற்கவில்லையே. இனி முடிவில் செல்வோம்: ராவண ஸம்ஹாரமான பின்பு விபீஷணாழ்வான் பெருமாளை அங்குச் சில நாள் தங்கி விச்ரமிக்குமாறுவேண்ட "ந மே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராண்யாபரணாநி ச, தம் விநா கைகயீபுத்ரம் பரதம் தர்மசாரிணம்" என்று சொல்லி உடனே புஷ்பகவிமானத்திலேறி அயோத்திக்குப் புறப் பட்டார். பரதாழ்வானுடைய துடிப்பையும் மறந்து வழி யிடையில் பரத்வாஜாச்ரமத்திலே போஜனத்திற்கு இலைய கலப் பார்த்தார். இது எதனாலென்ன [பரத்வாஜஸ்ய சாஸநாத்] ஆக ப்ரக்ருதத்தில் "கைகேய்யா: ப்ரிய காரணாத்" என்றது அமுக்கிய ஹேதுவாய் "பிதுர் வசந நிர்தேசாத்" என்றதே ப்ரதாநமாகக் கடவது.

[" தம் வ்ரஜந்தம் ப்ரியோ ப்ராதா லக்ஷ்மணோநுஜகாம ஹ, ஸீதாப்யநுகதா ராமம் சசிநம் ரோஹிணீ யதா"] இங்கு பெருமாளோடுகூட இளைய பெருமாள் முன்னம் புறப் பட்டதாகவும், பிராட்டி பின்பு புறப்பட்டதாகவும் சொல் லிற்று. மேலே அயோத்யா காண்டத்தில் நிகழ்ச்சியை விரிவாகச் சொல்லுமிடத்து, முற்படப் பிராட்டியும், பிறகு இளைய பெருமாளும் உடன் வரவேண்டிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இதில் விரோத சங்கை வேண்டா; இவ்விருவரும் பெருமாளுக்கு அநுசரர்களாயினர் என்பதே இங்கு விவக்ஷிதமாகக் கொள்க. வேறுவிதமுண்டு. அதை மேலே சொல்லுவோம்.

(தொடரும்)

# சங்ககாலத் தமிழர் சமயம்

## (3) எல்லாமறிந்த ஸர்வஜ்ஞன் யார்?

மூன்றும் பரிபாடலில் ''நாறுயிரம் கை ஆறு அறி கடவுள்'' என்று உயிர்கள் தன்னையடைவதற்கு உபாயங்களை அறியும் பரம்பொருள் திருமாலே என்று காட்டி, ''நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ, முன்னை மரபின் முதுமொழி முதல்வ?'' என்று திருமாலுடைய பெருமையை அவன் ஒருவனே உணரமுடியும் என்று முழங்குகையாலே, திருமால் ஒருவனே எல்லாமறிந்தவன் என்று அறுதியிடப் பட்டது. ''நீயா நினைவ'' [நீங்காத அறிவை உடைய வனே!] என்றும் இவனுடைய ஸர்வஜ்ஞத்வம் வலியுறுத்தப் பட்டது. இப்படி எல்லாம் அறிந்தவனாக மற்ற எந்த தெய்வத்தையும் சங்ககாலச் சான்றோர்கள் கூறவில்லை என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

---


ஸ்ரீஉ.வே S. கிருஷ்ணஸ்வாமிஐயங்கார் M A B L

''ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்'' ஆசிரியர்


---

## (4) எல்லாம் வல்ல ஸர்வசக்தன் யார்?

மூன்றும் பரிபாடலில் திருமாலே எல்லாம் வல்ல ஸர்வ சக்தன் என்பதை ''இரு கை மாஅல்! முக் கை முனிவ! நாற்கை அண்ணல்! ஐங் கைம் மைந்த! அறு கை நெடு வேள்! எழு கையாள! எண் கை ஏந்தல்! ஒன்பதிற்றுத் தடக்கை மன் பேராள! பதிற்றுக் கை மதவலி! நூற்றுக் கை ஆற்றல்! ஆயிரம் விரித்த கைம் மாய மள்ள! பதினுயிரம் கை முதுமொழி முதல்வ! நூறுயிரம் கை ஆறு அறி கடவுள்! அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல் இனைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை'' என்னும் பகுதியாலே கடுவன் இளவெயினனார் காட்டினார். அனைத்துலகையும் படைத்

நளிப்பவன் இவனே என்று காட்டும் இடங்களிலும் 'இவன் எல்லாம்வல்லவன்' என்று விளக்கப்பட்டது. மறுபிறப்பை அறுத்து, மோக்ஷத்தை அளிக்கவல்லவன் இவன் ஒருவனே என்று காட்டியிருக்கும் இடங்களிலும் இவன் எல்லாம் வல்லவன் என்று அறுதியிடப்படுகிறது.

இவ்வண்ணமாக வேறு எந்த தெய்வமும் சங்ககாலச் சான்றோர்களால் ஸர்வசக்தராகக் குறிக்கப்படவில்லை.

## (5) மறுபிறப்பு அறுத்து மோக்ஷமளிப்பவன் யார்?

மூன்றும் பரிபாடலில் ''மாஅயோயே! மாஅயோயே! மறு பிறப்பு அறுக்கும் மாசு இல் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே!'' என்று உயிர்களின் மறுபிறப்பை அறுக்கும் குற்றமற்ற திருவடிகளையுடைய அப்ராக்ருதத் திருமேனியை உடையவன் திருமாலே என்று கடுவன் இளவெயினனார் மூழங்கினார். 'ஆறு அறிகடவுள்' என்று உயிர்களை உய்விக்கும் வழிகளையறிந்தவன் திருமாலே எனக்கூறி இதை வலியுறுத்தினார். பதின்மூன்றும் பரிபாடலில் 'நின் திருவரை அகலம் தொழுவோர்க்கு உரிது அமர் துறக்கமும் உரிமை நன்கு உடைத்து'' என்று நல்எழுதியார் திருவின்நாயகனைத் தொழுகின்றவர்களே பரமபதமாகிற வீட்டுலகத்தைத் அடையலாம் என்று காட்டினார். ''இருமை வினையும் இல ஏத்துமவை'' என்று ஜீவர்கள் மோக்ஷத்தை அடையாமலிருப்பதற்குக் காரணமான புண்யபாபங்களாகிற இருவினைகளும் திருமாலைத் துதிப்பவர்களுக்கு நீங்கிவிடும் என்றும் நவின்றார். பதினைந்தாம் பரிபாடலில் இளம்பெருவழுதியார் ''நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்?'' என்று ''துழாய்மாலை அணிந்த திருமால் கொடுத்தாலல்லது வீட்டுலகை எவராலும் அடையமுடியாது' என்றும், ''அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம் எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப'' என்று 'அரிய உபாயங்களைச் செய்வதன்மூலம்

கிடைக்கும் வீட்டுலகம், மாலிருஞ்சோலையில் வாழ்வதாலேயே எளிதில் அடையத்தக்கது' என்றும் பறைசாற்றினர். ''சாறு கொள் துறக்கம்' [பரிபாடல் 19-6] என்று அமுதமுண்டு பிரளயகாலம் வரையில் வாழலாம் படியான சுவர்க்கலோகத்தைக் குறிப்பிட்ட சங்ககாலச் சான்றோர் ''உரிதமர் துறக்கம்'' என்று பதின்மூன்றும் பரிபாடலிலும், 'வீறுபெறு துறக்கம்' 'அரிதின் பெறு துறக்கம்' என்று இங்கும் பேரின்பத்தையளிப்பதாய், அழியாததான திருமாலின் வீட்டுலகத்தைக் குறிப்பது காணத்தக்கது. இப்பாடலிலேயே 'கண்டு மயர் அறுக்கும் காமக் கடவுள்' என்று திருமாலிருஞ்சோலைமலையே தன்னை காண்பார்க்குப் பிறவிக்குக் காரணமாகிய மயர்வையறுக்கும் வழிபடு கடவுளாயிருப்பது என்று பாடியிருப்பதும் குறிக்கொள்ளத் தக்கது. இவரே ''எவ்வயின் உலகத்தும் தோன்றி அவ்வயின் மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்'' என்று திருமால் உலகில் அவதரிப்பது உயிர்களுக்குப் பிறவித் துன்பத்தைக் களைந்து, வீட்டுலகை அளிப்பதற்காகவே என்று முழங்குகிறார். பரிபாடல் திரட்டிலுள்ள முதற் பாடலில் ''துளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரைய—இருகேழ் உத்தி அணிந்த எருத்தின் வரை கெழு செல்வன் நகர்'' என்று இருந்தையூரிலிருந்த ஆதிசேஷனுடைய கோவில் மோக்ஷலோகமான திருமாலுலகம்போல் விளங்கியது எனகூறும்போது 'துளங்கா விழுச்சீர்த் துறக்கம்' என்று இவ்வுலகம் அழியாதது என்றும், பேரின்பத்தை அளிக்கக் கூடியது என்றும் பறைசாற்றியிருப்பது காணத்தக்கது.

தொல்காப்பியர் மன்னர்க்குத் திருமாலை உவமை கூறும் இவைநிலை என்னும் புறத்துறையைக் கூறும்போது 'மாயோன் மேஎய மன்பெருஞ்சிறப்பில் தாவா விழுப்புகழ் பூவை நிலையும்'' என்று பாடினர். இதில் 'மன்பெருஞ் சிறப்புஇல் மாயோன்' [அழியாத பெரிய சிறப்பையுடைய இருப்பிடமாகிற.பரம பதத்தையுடைய திருமால்] என்று திருமாலுடைய பரபதம் அழியாத பெருஞ்சிறப்பை

உடையது எனக்குறித்திருப்பதும் உரைத்தக்கது. புறநானூற்றில் 358-ம் பாடலில் ''விட்டோரை விடாஅள் திருவே விடாஅதோர் இவன் விடப்பட்டோரே'' என்று 'உலகப் பற்றற்றுப் பரம்பொருளைப் பற்றியவர்க்குத் திருமகள் மோக்ஷச் செல்வத்தை அடையச்செய்து, என்றும் அவரை விடாதிருப்பாள். உலகப்பற்று விடாதவர்க்கு இவள் அச்செல்வத்தை அடைவிக்காததினால் அவர்கள் இவளால் விடப்பட்டவரேயாவர்' என்னும் கருத்தைத் தெரிவிக்கையால் உலகப் பற்றற்றவரால் பற்றத்தக்கவர் திருமகளும் அவளது நாயகனான திருமாலுமே என்று தெளிவாக்கப்படுகிறது. பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் 371-வது அடிதொடங்கி திருவெஃகாவின் சிறப்பைப் பாடும்போது ''கார்நறு நீலம் கடிக்கும் கழனிக் களிறு படிந்தாங்கு, பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்.. பெறற்கு அருந் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும் பொய்யா மரபின் பூ மலி பெருந்துறை'' [காந்தள் மலர் பூத்துள்ள அழகிய மலையிலே யானை படுத்திருப்பதுபோல், பாம்பணையிலே பள்ளி கொண்டவன் வாழும் திருவெஃகாவிலே பெறுவதற்கரிய பழமையான பெருமைகளையுடைய பரமபதத்தை யொத்ததாய், காலந்தவறாமல் மலரும் பூக்கள் நிறைந்த பெருங்கோயிலிலே] என்று திருவெஃகாக் கோயிலுக்கு உபமானமாகப் பரமபதத்தை எடுக்கும்போது 'பெறற்கு அருந்தொல் சீர்த்துறக்கம்' என்று பாடியிருப்பதும் முற்கூறிய விஷயங்களை வலியுறுத்துகிறது. இவற்றிலிருந்து உயிர்களுக்குப் பிறவாமையை அளித்து, வீட்டுலகமாகிற பரமபதந்தைத் தருபவன் திருமால் ஒருவனே என்பதே சங்ககாலச் சான்றோர்களின் தீர்ந்த முடிவு என விளங்குகிறது.

வேறு எந்த தெய்வத்திற்கும் மோக்ஷத்தை அளிப்பவனாயிருக்கையாகிற இப்பெருமையையும் சங்ககாலச் சான்றோர்கள் எங்கும் பாடியதில்லை என்பது குறிக்கொள்ளத் தக்கது.

(தொடரும்)

## ஸ்ரீ வானமாமலை மடம் 28வது பட்டம்
## ஸ்ரீ சடகோப இராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளின்
## நவ திருப்பதி யாத்திரையும்,
## பெருங்குளம் ஸ்ரீமாயக் கூத்தர் ஸன்னிதி
## த்வஜஸ்தம்ப ப்ரதிஷ்டையும் :—

ஸ்ரீ ஸ்வாமிகள் 6-2-81ல் சாயங்காலம் வானமாமலையில் இருந்து புறப்பட்டு அன்று இரவு ஒன்பது மணிக்கு ஆழ்வார் திருநகரி எழுந்தருளினார். ஊர் எல்லையில் ஆழ்வார் அரிவாணம் வாத்தியங்களுடன் வர அவைகளைப் பெற்றுக் கொண்டு, தங்கப் பல்லக்கில் பட்டணப் பிரவேசம் எழுந்தருளி மடத்திற்கு எழுந்தருளினார்.

மறுநாள் காலையில் பரிஜாரங்களுடன் கோயிலுக்கு எழுந்தருள த்வஜஸ்தம்பத்தடியில் ஸ்ரீ சடகோப மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு பெருமாள் ஸன்னிதியில் மங்களாசாஸனம் செய்து மரியாதைகளுடன் ஆழ்வாரை தெண்டனிட்டு ஸேவித்து நிற்க, அங்கும் அருளிப் பாடோடு பரிவட்டம் முதலான மரியாதைகளைப் பெற்று மாடவீதி பிரதட்சிணமாக பல்லக்கில் எழுந்தருளினார்.

அங்கு எம்பெருமானார் ஸன்னிதி வாசலில் எம்பெருமானார் ஜீயரால் வரவேற்கப்பட்டு அன்யோன்யம் வந்தனபரராய், இருவரும் எம்பெருமானார் ஸன்னிதிக்குள் எழுந்தருளி அங்கு எம்பெருமானார் ஜீயர் புருஷகாரமாக பவிஷ்யதாசாரியரான எம்பெருமானாரை மங்களாசாஸனம் பண்ணி வைத்து, விசேஷ மரியாதைகளுடன் மற்றும் ஸன்னிதிகளையும் ஸேவித்து இரண்டு ஜீயர் ஸ்வாமிகளும் முன் மண்டபத்தில் எழுந்தருளி இருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ வானமா

மலை ஜீயர் ஸ்வாமிகள் பவிஷ்யதாசாரியரான எம்பெரு மானுடைய வைபவத்தைப் பரக்க உபன்யசித்தருளினார்.

இது சமயம் இந்த யாத்திரையில் கலந்து கொண்ட ஸ்ரீ. உ. வே. வித்வான்கள் சதாபிஷேகம் கோவிந்த நரஸிம் மாசாரியாரும், வேளுக்குடி வரதாசாரியாரும் விசேஷ மாக உபன்யாசித்தார்கள். பிறகு, ஸ்ரீ ஸ்வாமிகள் மடத் திற்கு எழுந்தருளினார்.

7-2-81 இரவு 9 மணியளவில் பெருங்குளம் எழுந்தருளி அரிவாண மரியாதைகளுடன் ஸ்ரீ மாயக் கூத்தனை மங்களா சாஸனம் செய்தபிறகு யாகசாலையில் அங்குரார்ப்பணம் ஆரம்பிக்கப்பட்டது. மூன்று தினங்கள் இரண்டு வேளையும் உபயவேத பாராயணம், புராணதிகள் படனம், பகவத் விஷய, ஸ்ரீ பாஷ்ய படனம் இவைகளோடும் விசேஷ ஹோமங்களோடும் 9-2-81ல் காலை 12-30 மணிக்கு சம்ப் ரோக்ஷணை செய்யப்பட்டு, சாற்றுமுறை, கோஷ்டி, விசேஷ ததியாராதனை நடத்தப்பட்டது. மூன்று நாளுமே விசேஷ ததியாராதனைகள் இரண்டு வேளையும் நடைபெற்றன. சம்ப் ரோக்ஷணையன்று இரவு கெருடோத்ஸவம் நடத்தி வைக்கப் பட்டது. எல்லாக் கைங்கர்யபரர்களுக்கும் விசேஷ சம்பாவனை, சன்மானங்கள் செய்விக்கப்பட்டன. எல்லாச் செலவும் ஸ்ரீ ஸ்வாமியின் கைங்கர்யமாக நடைபெற்றது. அங்கிருந்து ஸ்ரீ வைகுண்டம், தத்தம், திருப்புளிங்குடி, இரட்டைத் திருப்பதி, எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து கொண்டு தென்திருப்பேரைக்கு எழுந்தருளினார். அங்கும் அரிவாண மரியாதையோடு வரவேற்றார்கள். அங்கு இரண்டு நாள் எழுந்தருளி இருந்தார். அங்கு ஒரு நாள் ததி யாராதனமும், பட்டணப் பிரவேசமும் விசேஷமாக நடைபெற



தங்கப் பல்லக்கில் ஶ்ரீபர்ஸ்வாமியின் பட்டணப்ரவேசம்

நடத்தி வைத்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு திருக்கோளூர் ஸ்ரீ வைத்தமாநிதியை மங்களா சாஸனம் செய்து திருநகரிக்கு எழுந்தருளினார்.

ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் அந்தந்த எம்பெருமான்களுடைய வைபவங்கள் விசேஷமாக உபன்யஸிக்கப் பட்டன. 13-2-81 காலை திருநகரியில் ஆழ்வார், ஆதிநாதரை மங்களாசாஸனம் செய்து எழுந்தருளுகையில் கோயில் நிர்வாக அதிகாரியின் பிரார்த்தனைக் கிணங்க அன்று நடைபெற்ற பரமபத வாசல் கோபுரத் திருப்பணி பூர்த்தியானதற்கான சிலாசாஸனம் திறக்கப்பட்டு, அவ்விடத்திலேயே பெரும் திரளின் மத்தியில் ஆழ்வாருடைய வைபவம் உபன்யஸிக்கப்பட்டது.

அன்று இரவு ஆழ்வார், ஆதிநாதரை மங்களாசாஸனம் செய்து வானமாமலை எழுந்தருளினார். மறுநாள் பெருமாளுக்கு விசேஷ எண்ணெய்க் காப்பு, போகம் நடத்தி, மடத்தில் விசேஷமாக ததியாராதனையும் நடத்தப்பட்டது. அன்று இரவு ஊரார்கள் எல்லோரும் பரம உற்சாகத்துடன் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு பட்டணப் பிரவேசம் பண்ணி வைத்தார்கள்.

இந்த யாத்திரைக்கு பெருங்கொடை வள்ளலான ஸ்ரீமான் T.V.S. ரங்கநாதன் என்ற ரமேஷ் இரண்டு வாகனங்களை (கார்) உபகரித்துள்ளார். அதனால் இந்த யாத்திரை சுகமாகவும், பெரும்பாலோர் கலந்து கொள்ளவும், சீக்கிரமாகவும், மங்களகரமாகவும் முடிவு பெற்றது.

—0—

# விகடனுக்குக் கடிதம்

அன்புள்ள மேத்தா அவர்களுக்கு,

தாங்கள் ஆனந்தவிகடனில் எழுதிவரும் சோழநிலா என்ற சரித்திரத்தொடரை சமீபத்தில் பார்க்க நேர்ந்தது. குறிப்பாக அத்தொடரின் 21வது அத்தியாயத்தின் தலைப்பு 'வைணவ வெறுப்பா அரசியல் நெருப்பா' என்றிருக்கவே ஒரு வைணவன் என்ற முறையில் ஆவலுடன் படித்தேன். அதில் சரித்திர ஆதாரமில்லாத நிகழ்ச்சிகளும், சரித்திர ஆதாரங்களுக்குப் புறம்பான நிகழ்ச்சிகளும் புனையப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தேன்.

தாங்கள் எழுதும் புதுக்கவிதைகளை ரசித்துப் படிப்பவன் நான். ஆனால் தாங்கள் எழுதிவரும் சரித்திரத் தொடரின் குறிப்பிட்ட அத்யாயத்தைப் படித்தபோது அதுவும் உங்கள் புதுச் சரக்காகவே இருப்பது கண்டு வியப்படைந்தேன்.

1. தங்கள் கதையின் நாயகனை குலோத்துங்கனை வைணவ அடியார்கள் வஞ்சமாகத் திருமால் கோயிலுக்குள் அழைத்துச் சென்று திருப்பாவைப் பாசுரத்தை இனிமையாக இசைத்து அதில் அவன் மயங்கியிருந்தபோது திடீரென்று கொல்ல முயன்றார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள். இது, வேண்டும் என்றே வைணவர்களை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. இக்குலோத்துங்கனைக் கொல்வதற்கு வைணவர்கள் சதி செய்தார்கள் என்பதற்குச் சரித்திர ஆதாரமே கிடையாது.

ஆனால் தாங்கள் ஒன்று சொல்லக் கூடும். விகடனின் முதல் பக்கத்தில் 'கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே' என்று வெளியிடப்பட்டுள்ளது, என்னுடைய கதைக்கும் சேர்த்துத்தான்—என்று. ஆனால் இது,

சரித்திரத் தொடர்களைப் பொறுத்தவரையில் பொருந்தாது என்பதுதான் மரபு. அதையெட்டித்தான் தாங்களும் சிற்சில இடங்களில், தங்களுடைய கதைக்கு ஆதாரமாக அடிக்குறிப்பில் சில ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அப்படி, மேற்கண்ட நிகழ்ச்சிக்கும் ஒரு சரித்திர ஆதாரத்தைத் தங்களால் காட்டமுடியுமா?

2. தொடர்ந்து, வைணவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டதன் காரணத்தைப் பல்லவராயர் என்பவர் குலோத்துங்கனிடம் விவரிப்பதாகச் செல்கிறது உங்கள் கதை:

'உன் பாட்டனார் தில்லையில் திருப்பணிகள் செய்து வந்தபோது சிற்றம்பலத்திற்கு இடம் போதாதவாறு முன்றிலில் நந்திவர்ம பல்லவனால் நிறுவப்பட்ட திருமால் மூர்த்தம் தடைசெய்தது. அதே சமயத்தில் தில்லை கோவிந்தராசரை வழிபட்டு வந்த வைணவர்களும் உன் பாட்டனார் செய்த திருப்பணிக்கு இடையூறாய் இருந்தனர். அதனால் சினங்கொண்ட உன்பாட்டனார் அத்திருமால் மூர்த்தத்தைப் பெயர்த்துக் கடலோரத்தில் வைத்து அங்கே கோயில் கட்டிக் கொள்ளுமாறு ஆணையிட்டு விட்டுத் தன் திருப்பணியை நிறைவேற்றினான். இதனைக் கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் காவியச் சுவைக்காக—மன்றிற்கு இடம் காணவேண்டிக் குலோத்துங்கன் திருமாலை அவருக்கே உரிய பழைய கடலுக்கே அனுப்பிவிட்டான் என்று தம் தக்கயாகப் பரணியில் பாடினார்'' என்று எழுதியுள்ளீர்கள்.

''காவியச்சுவைக்காக'' என்ற இந்தப் புதுமையான கருத்து தங்களுடையதாகவேயிருக்கட்டும், அல்லது கதைப் பாத்திரமான பல்லவராயருடையதாகவே யிருக்கட்டும். தாங்கள் கீழே குறிப்பில் எடுத்துக்காட்டியுள்ள தக்கயாகப் பரணிப்பாட்டைப் பார்ப்போம்.

**முன்றில் கிடந்த கருங்கடல் போய்**
**முன்னைக்கடல்புகப் பின்னைத்தில்லை**
**மன்றிற்கிடங்கண்ட கொண்டல் மைந்தன்**

என்ற இப்பாட்டிற்கு உரையாசிரியர்கள் கூறும் பொருள்: **முன்றிற் கிடந்த**-முன்றிலில் சயனித்துக் கொண்டிருந்த **கருங் கடல்**-கருங்கடல் வண்ணனான கோவிந்தராசன் **போய் முன்னைக் கடல்புக**-தான் முன்பு வாசம் செய்த இடமான கடலுக்குள் செல்ல. இதுதான் இது வரையிலும் உரை யாசிரியர்கள் கூறிவரும் பொருள் ''காவியச்சுவை'' தங்க ளுக்கு மட்டும் புலப்பட்டது எங்கனம் என்று தெரியவில்லை. மேலும் திருமாலுக்கு உரிய பழைய இடம் கடலே. தவிர, கடற்கரையல்ல.

ஒருவேளை தங்கள் கூற்றுப்படி கடற்கரையில் கோவிந்த ராசனுக்கு ஒரு கோயில் கட்டியிருந்தால் அது இன்றைக்கும் இருந்திருக்க வேண்டுமே அது எங்கே உள்ளதென்று கூற முடியுமா?

தொடர்ந்து தாங்கள் குறிப்பில் காட்டியுள்ள 'குலோத்துங்க சோழன் உலா'வில் வைணவ வெறுப்பு நன்முகவே தெரிகிறது.

**''தில்லைத்திருமன்றின் முன்றில் சிறுதெய்வத்**
**தொல்லைக்குறும்பு தொலைத்தெடுத்து**

—என்பது அப்பாடல்

'தேவாதி தேவன்' என்று ஆழ்வார் போற்றியுள்ள தில்லைத்திருமால் இப்பாடலில் 'சிறுதெய்வம்'' என்று குறிக்கப்படுகிமுர். 'தொல்லைக்குறும்பு தொலைத்து, எடுத்து' என்று கூத்தர் பாடியுள்ளது குலோத்துங்கனது சைவசமயப்பற்றை வெளியிடுவதைக் காட்டிலும் அவனு டைய வைணவ சமய வெறியையே வெளியிடுகிறது. இதுவும் காவியச் சுவைக்காகத்தான் என்பீர்களோ?

'ஒட்டக்கூத்தருடைய இந்தப்பாடலையே பெரிய ஆதாரமாகக் காட்டிய வைணவப் பெரியார்களும் 'திருமால் மூர்த்தத்தைக் குலோத்துங்கன் கடலில் தூக்கி எறிந்து விட்டான் என்ற குற்றச்சாட்டை நாடெங்கும் பரப்பி திருமால் பக்தர்களுடைய மனங்களில் தீயை வளர்த்து விட்டனர்'—என்று தொடர்ந்து எழுதியிருக்கிறீர்கள்.

ஏதோ இல்லாததை வைணவர்கள் திரித்துக் கூறி விட்டார்கள் என்று கூறுவது அபாண்டமாகும். வைணவரல்லாதாரும், உலகோரனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட சரித்திரப் பேராசிரியருமான திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் தமது ''பிற்காலச் சோழர் சரித்திரம்'' என்ற வரலாற்று நூலில் (பக் 258) எழுதுவதைக் காண்போம்: ''கி. பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவமன்னனால் இல்லையம்பல முன்றிலில் நிறுவப் பெற்று, அந்நாள் முதல் நிலைபெற்றிருந்த **திருமால் மூர்த்தத்தைக் கடலில் எறிந்த** இவன் செயல் வைணவர்கள் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டது'' என்று எழுதியிருக்கிறார். வரலாற்று வல்லுநர்கள் காட்டும் உண்மை இவ்வாறு இருக்கும்போது, அதைத் தவறு என்று தாங்கள் கருதுவதற்கு ஆதாரம் என்ன?

3. தாங்கள் கீழே குறிப்பில் ''பிற்காலத்தெழுந்த 'திவ்யசூரி சரிதம்,' 'கோயிலொழுகு' முதலிய வைணவ நூல்கள் இரண்டாம் குலோத்துங்கன் மீது நிறையப் பழி சுமத்துவதோடு, அவனைக் கிருமி கண்ட சோழன்' என்றும் இழித்துரைக்கின்றன'' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இக்கூற்றும் எவ்வளவு நியாயமானது என்று சரித்திரப் பேராசிரியர்களையே கேட்போம். உலகம் போற்றும் சரித்திரப் பேராசிரியரான திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள், தாம் எழுதியுள்ள ''THE CHOLAS'' என்ற வரலாற்று நூலில் எழுதியுள்ளவை:

**"The general atmosphere was so unfavourable to a narrow religious policy that the monorch who attempted it lost his life in a popular revolt and has ever since been universally abhorred as the Krimikanta (the putrid ueck)''-page 644.**

(குலோத்துங்கனுடைய இந்தக் குறுகிய சமயக் கொள்கை பொதுவில் அவனுக்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்க, அதனுல் ஏற்பட்ட ஒரு பிரபலப் புரட்சியில் அவன் உயிரிழக்க நேரிட்டதோடல்லாமல் **உலகோரனை வராலும் கிருமிகண்டன் என்று வெறுப்புடன் அழைக்கப் பட்டான்**) என்று கூறும் சாஸ்திரியார் வைணவரல்ல. அவரே குலோத்துங்கனை **universally abhorred as krimi kanta** என்று குறிப்பிடும்போது நாங்கள் மட்டும், வைணவர்கள் குலோத்துங்கன் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி விட்டனர் என்று எழுதியது எங்ஙனம்?

இங்கே மற்ருென்றையும் கவனிக்க வேண்டும். சோழ வரசர்களில் பெரும்பாலோர் சைவர்களே. அவர்களில் ஒருவர்கூடப் பழிக்கப்பட்டதாகச் சரித்திரமே கிடையாது. மாருக அவர்கள் வைணவர்களால் பாராட்டப் பட்டிருக் கிருர்கள். ''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோளீ சர்க்குஎழில்மாடம் எழுபதுசெய்து உலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்'' என்று, சிவபிரானுக்கு எழுபது கோயில்கள் கட்டியுள்ள செங்கணன் கோச்சோழனைப்பற்றி திருமங்கையாழ்வார் பாடியிருக்கிருர். அவரவர் தத்தம் சமயத்தை வளர்ப்பது தவறல்ல, பிறசமயத்தினரைத் துன்புறுத்துவதான் தவறு. அப்படிக் கொடுங்கோல் புரிந்ததால்தான் இக்குலோத்துங் கன்மட்டும் கடுமையாகப் பழிக்கப்பட்டான். அதுவும் வைணவர்களால் மட்டுமன்று, உலகோரனைவராலும்.

4. தொடர்ந்து நீங்கள் கதையில் எழுதியுள்ளது: (உங்கள் கதையின் நாயகனான குலோத்துங்கனின்) தந்தை ஆட்சிக்கு வந்த போதும், இராசாதிராசன் ஆட்சியிலும் வைணவசமயத்தாருடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் நடந்தன. இருப்பினும் திருமால் பக்தர்களுடைய வெறுப்பை இன்னும் முழுமையாக நீக்க முடியவில்லை'' என்று பல்லவராயர் குலோத்துங்கனிடம் கூறுவதாக எழுதியிருக்கிறீர்கள். இக்கருத்தும் தவறு என்பதை வைணவநூல்களே நிருபிக்கின்றன.

இல்லைத்திருமாலைக் கடலில் எறிந்த சோழனின் மகனான விக்ரம சோழன் (உங்கள் கதாநாயகனின் தந்தை?) அகளங்கன் என்றழைக்கப்பட்டான். அவனை வைணவ ஆசார்யர்கள் பலமுறை கொண்டாடியிருக்கிறார்கள். திருமால் கோயில்களை இடித்து, இராமாநுசரை நாட்டை விட்டுத்துரத்தி, கூரத்தாழ்வானின் கண்களைக் குருடாக்கி, இப்படிப் பல கொடும் செயல்களைப் புரிந்ததால், குலோத்துங்கன் 'அவ்யபதேச்யன்' (பெயர் சொல்லத்தகாதவன்) என்று கூறப்பட்டான். அவனுக்கு மகனாகப் பிறந்தும் வைணவர்கள்பால், நல்லெண்ணம் கொண்டிருந்த விக்ரம சோழனை வைணவர்கள் பெரிதும் கொண்டாடியிருக்கிறார்கள்.

இன்றைக்குச் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தருளிய நம்பிள்ளை எனும் வைணவ ஆசாரியர் திருவாய்மொழிக்கு (10-7-5) தாம் எழுதியுள்ள விரிவுரையில் 'அவ்யபதேச்யனுக்கு அநந்தரத்திலவன், தமப்பன் செய்ததைக் கேட்டு 'என் செய்தானானன்' என்று கர்ஜித்தான். 'ஒரு மதிளை வாங்குங்காட்டில் அந்தர்சனம் குலைந்ததோ, திருவாய்மொழி என்றும் ஸ்ரீ ராமாயணம் என்றும் வலியன இரண்டு மஹாப்ரபந்தங்கள் உண்டாயிருக்க' என்று நைத்து' என்று எழுதியருளியுள்ளார். தந்தை திருமால் கோயில்களை இடிப்பதைக் கண்ட அவன் மகன் ''கோயில்

களை இடித்து விட்டால் வைணவம் அழிந்து விடுமா? திரு வாய்மொழியும் இராமாயணமும் உள்ளவரை வைணவம் அழியாது'' என்று கூறிய இச்செயலைப் பாராட்டித் தமது விரிவுரையிலேயே நம்பிள்ளை கொண்டாடியிருக்கிருர். மேலும் அவன் ஸ்ரீரங்கம் கோயிலில் செய்துள்ள விசேஷ திருப்பணிகளை மெச்சியும் ஸ்ரீரங்கம் கோயிலின் ஒரு பிரகாரத்துக்கு 'அகளங்கன் திருச்சுற்று' என்று பெயரிடப் பட்டுள்ளது. இன்றைக்கும் அது அப்படியே வழங்கப் படுகிறது. உண்மை இவ்வாறு இருக்க, இதற்கு மாருகத் தாங்கள் கொண்ட கருத்துக்கு ஆதாரம் என்ன?

தாங்கள் எழுதியது கற்பனைக் கதைதான் என்ருலும் சரித்திரக்கதை என்று முத்திரை குத்தப்படும் போது சரித்திர ஆதாரமில்லாதவற்றை எழுதுவது பிசகு. உலகப் பிரசித்தி பெற்ற வரலாற்றுப் பேராசிரியர்களால் நிலை நாட்டப்பட்டுள்ள வரலாற்று உண்மைகளுக்குப் புறம்பாக எழுதுவது மிகவும் தவறு. அனுவசியமாக வைணவர்கள் மீது ஒரு காழ்ப்பு உணர்ச்சியை ஏற்டுவது உங்களுக்கு இழிவைத் தேடித் தருவதோடு, பண்பட்ட பழம் பெரும் பத்திரிகையான ஆனந்த விகடனுக்கும் ஒரு இழுக்கைத் தேடித் தருகிறது. இது பற்றி ஏற்கனவே வெளிவந்துள்ள ஆராய்ச்சி நூல்களையும் வரலாற்று நூல் களையும் பார்க்காமல் சரித்திரத் தொடர் எழுதுவது வியப்பே!

நான் தங்களைக் கேட்பதெல்லாம் இந்த நான்கு கேள்வி கள் தான்:

1. தங்கள் கதையின் நாயகன் குலோத்துங்கனைக் கொல்ல வைணவர்கள் வஞ்சகமான முறையில் சதி செய்தார்கள் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் கூற முடியுமா?

2. சரித்திர ஆராய்ச்சியில் புகழ்பெற்ற சதாசிவப் பண்டாரத்தார் போன்ற பேராசிரியர்களே தில்லைக் கோவிந்தராஜனைக் கடலில் எறிந்தது பற்றிக்குறிப்பிடும் போது, அதைத் தாங்கள் மறுப்பதற்குச் **சரித்திர ஆதாரம்** என்ன?

3. **'Univarsally abhorred as the krimikanta'** என்று உலகப்புகழ் பெற்ற சரித்திரப்பேராசிரியர் திரு நீலகண்ட சாஸ்திரி அவர்களே உறுதிப்படுத்தியிருக்கும்போது, தாங்கள், குலோத்துங்கனை வைணவர்கள் (மட்டும்) நிறையப் பழிசுமத்தினார்கள் என்று கூறுவது ஏன்?

4. குலோத்துங்கனது சந்ததியினர் மீது வைணவர்களுக்குள்ள நல்லெண்ணத்தைப்பற்றி வைணவநூல்களே பகரும்போது அதற்கு மாறாகத் தாங்கள் கூறுவதற்கு ஆதாரம் என்ன?

இந்நான்கு கேள்விகளுக்கும் தாங்கள் ஆதாரத்தோடு **விகடன் மூலமாகவே** பதிலளிப்பீர்களானால் தங்களுடைய நேர்மையையும் நாணயத்தையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஒருவேளை ஆதாரங்கள் காட்ட முடியாமல் போனால் **விகடன் மூலமாகவே** தவறான நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் புனைந்ததற்காக வருத்தம் தெரிவிப்பீர்களானால் புண்பட்டிருக்கும் வைணர்களுடையவும் லக்ஷக் கணக்கான விகடன் வாசகர்களுடையவும் உள்ளங்களை மகிழ்வித்தவர் ஆவீர்கள். நிச்சயமாகச் செய்வீர்கள் என்ற

நம்பிக்கையுடனிருக்கும்,

வேங்கடகிருஷ்ணன்

ஆசிரியர்

## புது வருடப் பலன்

புது வருஷத்தில் எல்லாருக்கும் ஸகல ஸௌபாக்யங்களும் கிட்ட ஸ்ரீ கீதாசாரியனைப் பிரார்த்திப்போமாக

இவ்வருடம் அரசியல் ஆளுவோரிடையே குழப்ப மேற்பட்டு ஸ்திர மின்மை தொடரும். ஜனங்களுக்கு அஸௌகர்யங்கள் அதிகமாவதுடன், பண்டங்களின் விலைவாசி ஏற்றம் அதிகரிக்கும். புரட்டாசி முதல் கார்த்திகை மாத முடிய உலகில் அதுவும் பாரத நாட்டின் பக்கம் யுத்த அறிகுறி ஏற்படும். இந்த ஹானிகளைத் தவிர்த்து லோகம் க்ஷேமமாயிருக்கும் பொருட்டு, ஸ்ரீ ஸஹஸ்ர நாம பாராயணத்தாலும், 'ஆழி யெழ'' திருவாய்மொழி பாராயணத்தாலும், ஸ்ரீ கீதாசார்யனை இறைஞ்சுவோமாக. ★

# கீதாசார்யன் பதில்கள்

**ஸ்ரீனிவாஸன்** **செகந்திராபாத்**

கே : **ஜீயர்** என்ற சொல் எந்த மொழியைச் சேர்ந்தது?

ப : வடமொழியில் 'ஜீயர்' என்ற சொல் கிடையாது. எனவே அது தமிழ் மொழியைச் சேர்ந்த சொல்லாகத் தான் இருக்க வேண்டும். ஆனால் செந்தமிழில் 'ஜ' என்ற எழுத்து கிடையாது. 'சீரியர்' (உயர்ந்தவர்) என்ற சொல் சீயர் என்றாகி, நாளடைவில் ஜீயர் என்று மருவியிருக்கலாம். சீயம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு சிங்கம் என்று பொருள். உயர்ந்தவர்களைக் குறிக்க சிங்கத்தை உவமையாகக் கூறுவது மரபு. உதாரணம்—ஆண் சிங்கம், எனவே இந்த சீயம் என்ற சொல் ஜீயர் என்று மருவியிருக்கலாம்.

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாம் அத்யாயம்

**ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யச்சைநம் மந்யதேஹதம்**
**உபௌ தௌ நவிஜாநீதோ நாயம்ஹந்தி நஹந்யதே. (19)**

எவன், இந்த ஆத்மாவின் கொலைக்குச் சாதனமாக யாதொன்றை அறிகின்றான்; யாவன், யாதொரு சாதனத்தால் கொல்லப்பட்டானாக இந்த ஆத்மாவைக் கருதுகின்றான்; அவர்கள் இருவரும் அறிகின்றார்களில்லை; முற்கூறப்பட்ட தன்மைகளையுடைய ஆத்மா நித்யனாகையால், இந்த சாதனம் இவனைக் கொல்லாது; ஆகவே இந்த ஆத்மா கொல்லப்படான் என்பதாம்.

ஆத்மா அழியாதவன் என்றும், அவனை யாதொரு சாதனமும் கொல்லுதற்கியலாது என்றும், முன்னர் ''அவிநாசி'' என்ற ச்லோகத்தில் அருளியுள்ளான். கத்தி முதலான சாதனங்களால் இவன் அழிவுறான் என்று பின்னர் ''நைநம் சிந்தந்தி'' என்னும் ச்லோகத்தில் அருளுவானாயுள்ளான்; இங்கே கத்தி முதலானவற்றைச் சாதனமாகக் கருதுகின்றவனையும், அவற்றால் ஆத்மா அழிவைப் பெறுகின்றான் என்று எண்ணுகின்றவனையும் அறிவிலிகள் என்று கூறிப் பழிக்கின்றான்; இதனால் முற்கூறப்பட்ட விஷயத்தையும் பிற்கூறப்படும் விஷயத்தையும் எம்பெருமான் வலியுறுத்துகின்றான் என்பது புலனாவது காணலாம்.

கொலைக்குரிய சாதனத்தை ''ஹந்தாரம்'' என்று புல்லிங்கமாகக் கூறியுள்ளது முன்னர் ''கச்சித்'' என்று கூறியது போன்றதாம். கொலை செய்வான் ஏதுவாவது போல கொலைக் கருவியும் ஏதுவாகின்றதால், ஏதுத்தன்மை பற்றிக் கூறியருளினான் என்று கொள்ளுதல் வேண்டும். ஏநம் ஹந்தாரம் வேத்தி—இவனைக் கொலை செய்கின்றவனாக அறிகின்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். அப்பொழுது 'யாரை' என்ற வினா எழும்; அதனால் செயப்படு

பொருளை வருவித்துரைக்க வேண்டும் அருமையுண்டு ஆதலால் மேலே காட்டியவாறு பாஷ்யகாரர் அருளியுள்ளார். இங்கே எதம் என்பதற்கு இவனுடைய என்று பொருள். ஆறும் வேற்றுமைப் பொருளில் இரண்டாம் வேற்றுமை வந்துள்ளதாகக் கொண்டுள்ளார். இப்படிக் கொள்வது யுத்தப் பிரகரணத்திற்குப் பொருந்துவதாகும்.

இனி: ''கொலை செய்கின்றவன் ஒருவனைக் கொல்லுதற்குக் கருதினானாயினும், கொலையுண்டவன் கொல்லப்பட்டானுந் தன்னைக் கருதினானாயினும், அவர்கள் இருவரும் அறிகின்றாரில்லை; இவன் கொல்லுகின்றானல்லன்; கொல்லப்படுகின்றானல்லன்'' என்று உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. அங்கு ஆத்மா நித்யனாகையால், கொல்லுதல் செய்யான்; கொல்லப்படவும் மாட்டான் என்று சிறப்பித்துக் கூறியுள்ளதை இங்கே எதனையும் அறிவான் என்று பொதுமையில் அருளினான் என்று கொள்ளுதல் வேண்டும்; ஆதலால் இந்த சுலோகம் அவ்வுபநிஷத்திற்கு விவரணம் என்று ஸ்வாமி தேசிகன் தெரிவித்திருக்கிறார்.

மனுஷ்யன் முதலிய சப்தங்கள் உடலை மாத்திரம் குறிக்க மாட்டா; உடலோடு கூடியுள்ள ஆத்மாக்களைக் குறித்தனவாகும். ஆகையால் மனுஷ்யனைக் கொன்றான் என்றால் அது ஆத்மாவிற்குச் செய்யும் துன்பம் என்று பொருளாகிறது. ஒரு ஜீவனையும் துன்புறுத்தலாகாது; கற்றுணர்ந்த அறிஞர்களைக் கொல்லலாகாது என்று நூல்கள் கூறுகின்றமையால், யுத்தம் செய்யக் கூடாதே என்று கருதினான் அர்ச்சுனன்; கொல்லுதல் என்பது உடலில் நின்றும் உயிரைப் பிரிப்பதாம். அது துன்பம் பயப்பதாயினும் கொல்லப் பட்டார்க்கும் நன்மையுண்டாம்; ஆதலால் யுத்தம் என்பது நூல்களால் விதிக்கப்பட்டதொன்று; நீ அதனைச் செய் என்று எம்பெருமான் அவனுக்கு உணர்த்தினான் என்பது இதன் கருத்து.

★

# துளக்கமில் விளக்கம்

''தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்'' என்று திருமழிசைப் பிரானார் அருளியுள்ளார்: திருச்சந்த விருத்தம் நான்காவது பாசுரம். இதில் துளக்கமில் விளக்கம் என்பது இங்கு விஷயம்.

இந்தப் பாசுரத்தில் எம்பெருமான் தானே அருள்புரிந்து தமது திருவுள்ளத்தில் புகுந்து தன்னை உள்ளவாறு காட்டினான் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். ''என் றெனாவியுள் புகுந்த தென்கொலோ எம்பீசனே'' என்ற வடியால் இதனைத் தெரிவித்திருக்கிறார். ''நீயே என் காரியத்தை உனக்குப் பரமாக ஏறிட்டுக்கொண்டு என் மனத்திலே புகுந்து உன்னை உள்ளபடி காட்டித் தந்தது என்ன நீர்மை'' என்று ஈடுபடுகிறார். இத்தகைய அவனுடைய

R. வேங்கடராமாநுஜன்

தன்மைகளையெல்லாம் மேலேயுள்ள அடிகளால் கூறியருளினார் என்று கொள்ளுதல் வேண்டும்.

எம்பெருமான் எழுத்துக்களாகவும், வேதங்களாகவும், மந்த்ரமாகவும், ஓங்காரமாகவும், அகாரமாகவுமுள்ளவன் என்று காட்டியிருக்கிறார். ''மூன்று முப்பது ஆறினோடு ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்'' என்றதனால் ஐம்பத்து நான்கு எழுத்துக்களாகவுள்ளான் என்பதைத் தெரிவித்தருளினார். ''மூன்று மூர்த்தியாகி'' என்றதனால் ருக்யஜுஸ் ஸாமம் என்கிற மூன்று வேதங்களாகவும், ''மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்'' என்றதனால் அவ்வேதங்களின் கருத்தாய் விளங்கும் திருத்துவாதசாக்ஷரமந்த்ரமாகவும், ''தோன்று சோதி மூன்றுமாய்'' என்றதனால் மூன்று எழுத்துக்களைக் கொண்டு விளங்கும் ஓங்காரமாகவும், ''துளக்கமில் விளக்கமாய்'' என்றதனால் அகாரமாகவும் விளங்குகிற

என்று தெரிவித்திருக்கிறார். எம்பெருமானை எழுத்துக்களாகக் கூறியது அவற்றைத்தான் இயங்குவிக்கும் தொடர்பு பற்றியாகும்.

எழுத்துக்கள் பொருளையறிவிக்கும் பொழுது அவை வேதவடிவமாயின; அவ்வேதங்களுக்குக் காரணமாயிருப்பது ப்ரணவம்; அதற்குங் காரணமாயிருப்பது அகாரம் என்ற முறைப்படி முதலில் எழுத்துக்களையும், அதன்பின் வேதங்களையும், அதன்பின் ப்ரணவத்தையும், அதன்பின் அகாரத்தையும் அருளியிருக்கிறார் என்பது தெரிகிறது. இதனால், அகாரம் ஸகல சப்தங்களுக்கும் காரணம் ஆம் என்பதை அறியலாம். இங்கே விளக்கம் என்பது அகாரத்தைக் குறிக்கும்; துளக்கமில் என்ற அடைமொழியானது அது சலனமில்லாதது என்பதையுணர்த்தும். வேதத்திற்கு ப்ரணவம் காரணம்; ப்ரணவத்திற்கு அகாரம் காரணம் என்பது போல, அகாரத்திற்கும் வேறுகாரணம் உண்டோ? என்ற ஐயம் எழாமைக்காக 'துளக்கமில்' என்ற அடைமொழி கொடுத்திருக்கிறார் என்பது தெரிகிறது. அணையாத விளக்கம் போன்றது அகாரம் என்பதாம். விளக்கம்—விளக்கு.

இங்ஙனம்; திருமங்கையாழ்வாரும் ''மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை'' என்றவிடத்து எம்பெருமானை அகாரமாகவே அருளியிருக்கிறார். இங்கு அகாரத்தை ''மறையாய் விரிந்த விளக்கு'' என்று காட்டியுள்ளார். இதனால் அகாரம் வேதத்திற்குக் காரணமானது என்பது பெறப்படும். வேதத்திற்குத் தான் காரணம் என்பது மாத்திரம் இந்தப் பாசுரத்தில் பெறப்படுமே தவிர தனக்கு ஒரு காரணமில்லையென்பது பெறப்படமாட்டாது. ஆதலால் துளக்கமில் விளக்கம் என்பதையும் கூட்டி ''மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை'' என்று அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்யஹ்ருதயத்தில் அருளினார் என்பது புலனாகிறது.

எனவே அகாரம் தனக்கொருகாரணமின்றியே சொற்கள் அனைத்திற்கும் காரணமாயுள்ளது என்பதை அறியலாம். ''ஆதலால் அகாரோவை ஸர்வாவாக்'' என்று கூறப்படுகிறது. ஸகலசப்தங்களும் அகாரமே என்பது பொருள்.

சொற்களைத் தோற்றுவிக்கும் போது இறைவன் முதலில் அகாரத்தை நினைத்து பின்பு ஓங்காரத்தையும், அதன் பின் வேதங்களையும் நினைத்து, உச்சரித்தான் என்பது பற்றி, அகாரம் மற்றைச் சொற்களுக்குக் காரணம் எனப்படுகிறது. இவ்வாறு, வேதத்திலும் புராணங்களிலும் சொற்கள் அனைத்திற்கும் காரணம் அகாரம் என்று கூறப்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு, தமிழ் மாமுனிவரான திருவள்ளுவனார் ''அகர முதல வெழுத்தெலாம்'' என்று பணித்தார் என்பது தெளிவாகிறது. இங்கே எழுத்தென்பது எழுத்துக்களை வடிவாகக் கொண்ட சொற்களை உணர்த்தி, அவ்வழியாலே வேதங்களைக் காட்டுவதாகும். தமிழ் வேதங்களையும் வடமொழி வேதங்களையும் உணர்த்துவதற்காக எழுத்தெனக் கூறுமல் ''எழுத்தெல்லாம்'' என்று கூறியிருக்கிறார். இவ்விடத்தில் ''தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, 'எழுத்தெல்லாம்' என்றார்'' என்று உரையாசிரியர் கூறியுள்ளதை நோக்கினால் இது தெரியவரும்.

வடமொழி வேதம் போலவே தமிழ் வேதமும் நித்தியமானது என்றும், வட மொழி வேதத்திலும் தமிழ் வேதம் சிறந்தது என்றும் கூறுவர் தமிழர். இதனை உட்கொண்டே ''செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி'' என்று தமிழ் வேதத்தை முற்படக் கூறியருளினார் திருமங்கையாழ்வார். தமிழோசை—தமிழ்வேதம். ஓசை என்பது சொல்லைக் காட்டும், தமிழ்ச் சொல் என்றதாம். இதனால் வடமொழியைப் போலவே தமிழ் மொழியும் அநாதியானது என்பது பெறப்படும். இந்த விஷயத்தை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்ய ஹ்ருதயத்தில் காட்டியிருக்

கிறார். ''செந்திறத்த தமிழ் என் கையாலே ஆகஸ்த்யமும் அநாதி'' என்று அருளியுள்ளார். ஆகஸ்த்யம்—தமிழ்: அகஸ்த்ய முனிவரால் விளங்கிய மாத்ரம் கொண்டு ஆகஸ்த்யம் எனப்படுகிறது. அகஸ்த்ய முனிவரால் தோற்றுவிக்கப் பட்டதென்று கொண்டு ''தமிழ்மொழி அநாதியல்லாமையால், தமிழ் வேதம் நித்யமானது என்று எங்ஙனம் கூற முடியும் என்ற கேள்விக்கு விடையளிக்கிறது இந்த வாக்கியம். ஆழ்வார், வடமொழி வேதத்தோடு தமிழ் வேதத்தைச் சேர்த்து எடுத்துள்ளார். அதனை முற்படக் கூறியிருக்கின்றார்; ஆதலால் தமிழ்மொழி அநாதியானது என்பது பெறப்படும் என்று விடையளித்துள்ளார். எனவே, தமிழ்மொழி அநாதியானதால் தமிழ் வேதமும் நித்யம் என்பதில் தடையில்லை. ஆதலால் இவ்விரண்டு வேதங்களுக்கும் காரணமாயிருப்பது அகாரம் என்பது சித்தம்.

இனி இவ்வகாரத்தின் பொருளை அருளிச் செய்கின்ற பிள்ளை லோகாசார்யர் ''இதில் அகாரம், ஸகல சப்தத்திற்கும் காரணமாய் நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே ஸர்வஜகத்துக்கும் காரணமாய் ஸர்வ ரக்ஷகனை எம்பெருமானைச் சொல்லுகிறது'' என்று அருளியிருப்பதால், இது ஸர்வகாரணனும் ஸர்வ ரக்ஷகனும் உள்ள நாராயணனை அறிவிக்கும் இது என்று தெளிந்து கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் காரணமாய்த் தனக்கொரு காரணமின்றியிருப்பவனே ஸர்வகாரணனுவான்; அவனே ஸர்வ ரக்ஷகனுமாவான். இதனை ''ஆதிபகவன் முதற்றே யுலகு'' என்ற பகுதியால் திருவள்ளுவனார் தெரிவித்திருக்கிறார். உலகம் ஆதிபகவனுகிற முதலையுடையது என்று பொருள். ஆதிபகவன் உலகத்திற்கு முதல் – காரணம் என்பது பெறப்பட்டது. இத்தன்மைய ஒருவனே எல்லாச் சொற்களுக்கும் பொருளாவான்; அவனே அகாரத்திற்கும் பொருள் என்பது சித்தம். ★

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 9. டில்லிக்காரர்கள் ஏமாற்றம்

அரங்க நகரத்தின் கடைசியான நம்பிக்கை பஞ்சு கொண்டானின் உருவில் கீழே விழுந்து கிடந்தது.

வயிரம் பாய்ந்த தேக்கு மரம் ஒன்று கால விசேஷத்தில் அடியோடு சாய்ந்து கிடப்பது போல் அவர் கீழே கிடந்தார்.

அவரது உடலில் குத்திக் கொண்டு நின்ற ஈட்டி, தென்னக மக்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறைமேல் குத்தப் பட்ட ஈட்டி போன்று நின்று கொண்டிருந்தது.

பஞ்சு கொண்டானின் திருக்கண்கள் வானத்தைநோக்கி விழித்திருந்தன. வானம் என்ற எல்லையற்ற சூன்யத்தையும், அதில் தொங்கும் பிரபஞ்சங்களையும், அவைகளிடையே சிக்குண்டிருக்கும் காலம், இடம், காரணம் என்ற பரிமாணங் களையும் கடந்து அவர் பார்வை வீசிச் சென்று எங்கேயோ ஒரு எல்லையில்லா, காலமிலா, காரண காரியமிலா வெளி யில் மெள்ளக் கரைந்து கொண்டிருந்தது.

அரங்கன், அரங்கநகரம், அதன் நற்காப்பு, அதற்கான யுத்தம், இவை யாவற்றின் மீதும் அவர் கொண்டிருந்த எண்ணத்தின் பூதாகாரமான உருவம், அவர் அந்த யாத்திரை போகையில், மெள்ள மெள்ளக் குறுகிச்

சிறிதாகிப் பொட்டாகிப் புள்ளியாகி, அணுவாகி, அதிலும் நுண்ணியதாகி கடைசியில் மறைந்து கொண்டிருந்தது.

அந்த யாத்திரை இந்த இகத்தின் எல்லையைத் தாண்டிச் சென்ற பிறகு, எல்லாம் ஒடுங்கி அவர் உடம்பு நிசப்தமாகி விட்டது. அப்போது குலசேகரன் கண்ணில் நீர் மழையாகப் பெய்யத் தொடங்கியது.

தழதழத்த குரலுடன் இடையறாது ''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே! ஸ்ரீமதே நாராயணாய நம!'' என்ற துவய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தான்.

''ஐயா! ஐயா!'' என்று அவனை உலுப்பி எழுப்பிய ஒரு வீரன் ''ஐயா, இறந்தவர்களையும் இறந்து கொண்டிருக்கிறவர்களையும் நினைத்து அறிஞர்கள் வருந்த மாட்டார்கள். ஆகவே, எழுந்திருங்கள். நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்!'' என்று கூறி அவனைத் தேற்றினான்.

சோகித்திருந்த குலசேகரன், தன்னுள்ளே தேறி எழுந்து, பஞ்சு கொண்டானின் தாமரைத் திருவடிகளைத் தொட்டு வணங்கி, அவர் மீது குத்திக் கொண்டிருக்கும் ஈட்டியை மெள்ள உருவி எடுத்து, அவரது திருமேனியை வெண்மைத் துணியால் மூடி, மற்றொரு வீரனின் உதவியுடன் மெதுவாக அந்த சரீரத்தைத் தாங்கியவாறு எடுத்துச் சென்று, துலா மண்டபத்தின் நடுவில் எழுந்தருள வைத்தான்.

[* இந்தக் கதை முடிந்த பிறகு, பஞ்சு கொண்டானின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றும் வகையில், அரங்கப் பெருமான் வடக்கு வாயிலில் எழுந்தருளும் போதெல்லாம் பஞ்சு கொண்டானின் பெயரை அருளப் பாடி அவருக்கு மரியாதை அளிப்பது வழக்கமாக இருந்தது.

இப்போது இந்த வழக்கம் மறைந்து விட்டது என்று தெரிகிறது.]

[பஞ்சு கொண்டானுக்கு இணையாக, பின் ஆண்டுகளில் வீரத்தைக் காட்டியவர்கள் ஆயிரம் ராஜபுத்திர வீரர்கள் ஆவர். ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட சந்தா சாகிப்பிற்கு உதவி புரிவதற்காக இந்த வீரர்கள் வடக்கேயிருந்து வந்திருந்தார்கள். திருவரங்கக் கோயிலின் அரண்களைப் பாதுகாப்புக் கோட்டைகளாக்கிக் கொண்டு ஆங்கிலேயருடன் போரிடும் போது, கோவிலின் வழிபாடுகளுக்கு எந்த விதக் குறையும் வராமல் இந்த வீரர்கள் கவனிப்போடு பாதுகாத்து வந்தார்கள். ஆனால் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றுக் கோவிலை கைப்பற்ற வரவே, ராஜபுத்திர வீரர்கள் கோவிலின் மூன்றாவது திருச்சுற்றில் நின்று கொண்டு ''இந்தச் சுற்றுக்குள் அந்நியர் யாரும் வரக் கூடாது. அப்படி ஒரு வாக்குறுதி கொடுத்தால் பணிவோம். இல்லாவிடில் கடைசி வீரன் உள்ளவரை போராடி உள்ளே வருபவர்களை எல்லாம் வெட்டித் தள்ளுவோம்'' என்றும் சபதமிட்டார்கள். அவர்களது சமயப் பற்றையும் வீரத்தையும் மதித்த ஆங்கிலத் தளபதி அவர்களது விருப்பம் போலவே வாக்குறுதி அளித்தார். கோவிலின் உட்சுற்றுகளும் கருவறையும் இதனால் காப்பாற்றப்பட்டன. கி. பி. 1752-ல் இது நடந்தது.]

பஞ்சு கொண்டான் பாதுகாத்து வந்த அரங்க நகரக் கோட்டை அதன் பின் சீக்கிரம் விழுந்தது. அதை அடுத்து ஆரவாரத்துடன் டில்லி வீரர்கள் உள்ளே சென்றார்கள்.

பிராகாரங்கள் யாவும் அல்லோலகல்லோலப்பட்டன. பரிசனங்கள் பல்வேறு திக்குகளில் ஓடினார்கள். கூச்சலும் அழுகுரல்களும் எங்கும் கேட்டன. வெறி பிடித்தவர்கள் போல் மக்கள் எங்கும் சிதறிப் போனார்கள்.

அகப்பட்டவரை எல்லாம் வாளுக்கு இரையாக்கிக் கொண்டு டில்லி வீரர்கள் பிராகாரத்தில் பரவினார்கள்.

வராகமூர்த்தி சன்னிதி முன்னுள்ள மண்டபத்தில் சனர் மக்களும் பெரியவர்களும் ஆயிரக்கணக்கில் கூடி இருப்பதைப் பார்த்த டில்லி வீரர்கள் உடனே அங்கு விரைந்து சென்றார்கள்.

''எங்கே உங்கள் பொருள்கள்? எங்கே உங்கள் அணி மணிகள்?'' என்று அங்குள்ளவர்களை நோக்கி கர்ஜித்தவாறு அவர்கள் கேட்டார்கள்.

யாரும் மறுமொழி கொடுக்கவில்லை.

கோபம் கொண்ட வீரர்கள் கைக்கு அகப்பட்டவரை எல்லாம் வாளால் வீழ்த்தவே, மற்றவர் யாவரும் உடனே சிதறி ஓடலானார்கள்.

அவர்களை விடாது சென்று பிடித்துக் கத்திக்கு இரை யாக்கி வஞ்சம் தீர்த்தார்கள் டில்லி வீரர்கள்.

இரத்தம் பெருக்கெடுத்து ஓட, உடல்கள் எல்லாம் உயிரற்று வீழ, வெகு விரைவில் அந்தப் பிரதேசம் முழுவதும் ஒரு சோகக் காட்சியாக மாறியது.

அந்த வேளையில் உள்ளே நுழைந்து பிராகாரத்தில் வந்து கொண்டிருந்தார் டில்லிப் படைகளின் தளபதியான உலுக்கான்.

அவரைப் புடை சூழ அவரது பரிவாரங்களும் நடந்து வந்தார்கள்.

தளபதியின் முகத்தில் ஒரே எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன.

தமது பரிவாரங்களிடம் எதையோ குறை கூறிக் கடிந்து கொண்டு, இடை இடையே கீழே கிடக்கும் உடல்களைப் பார்த்துச் சம்மதிப்பது போல் தலையை அசைத்து கொண்டு நடந்து போனார் அவர்.

அங்கங்கே உதிரியாக ஓடுகிறவர்களையும், பதுங்கி இருப்பவர்களையும் டில்லிப் பரிவாரங்கள் பிடித்து வாளுக்கு இரையாக்கியவாறே முன்னால் சென்றார்கள்.

வழியில் கிடக்கும் உடல்களை அப்பால் தள்ளி தளபதி வருவதற்கு வழி பண்ணிக் கொண்டே பலர் முன்னால் போனார்கள்.

தெற்கு வாயில் வந்ததும் நாழிகை வட்டில் முகப்பின் முன் அதி கோபத்துடனே வந்து நின்றான் டில்லி தளபதி.

''விடாதே! எல்லா இடங்களையும் தோண்டிப் பார். சிற்பங்களை உடைத்துப் பார்! திரவியங்களை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று சீக்கிரம் கண்டுபிடி! உள்ளே பதுங்கி இருப்பவர்களையெல்லாம் வெட்டித் தள்ளு!'' என்று கோபத்தில் உத்தரவுகளை அள்ளி வழங்கலானார்.

அதன்பின் உள்ளே சென்ற டில்லி வீரர்கள் மண்டபங்களிலும் பிரகாரங்களிலும், தூண்களிலும், சிற்பங்களிலும், கல்சுவர்களிலும், சன்னதிகளிலும் சென்று ஆங்காங்குள்ள இடங்களைத் தோண்டியும், நகர்த்தியும், பிடுங்கியும், உடைத்தும் திரவியங்களைத் தேடும் அளவில், எதுவும் விளையுயர்ந்ததைக் காணாமல், மிக ஏமாற்றம் அடைந்தவர்களாய் அழகிய மணவாள மண்டபத்தில் நிற்கும் டில்லித் தளபதியிடம் விவரங்களைக் கூற, அவரும் தமது மாலிக்களைக் கூட்டி, ''இந்த திரவியமெல்லாம் வெளியே போயிருக்க வேண்டும். அல்லது உள்ளே இருந்தால் அவை இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க அதிக நேரம் செலவழிக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது? நாம் இப்போதே மதுரை போயாக வேண்டும்!'' என்று கூறினார். பிறகு அவரும் அவரது மாலிக்களும் யோசனையில் ஆழ்ந்தார்கள்.

நடுப்பகல் கழிந்து மாலை அணுகும் போது டில்லிப் படைகளின் நீளமான அணிகள் தென் திருக் காவேரியைக் கடந்து சென்று கொண்டிருந்தன. (தொடரும்)

# கண்ணன் கதைகள்

## தீபம் நா. பார்த்தசாரதி

### 5. பிள்ளைப் பருவத்திலே

கோகுலத்தில் வளர்ந்து வந்த சிறுவனின் உண்மைப் பெற்றோர்களாகிய தேவகியும், வசுதேவரும் அவன் வளர்ச்சியைக் கேட்டுத் தொலைவிலிருந்தே மகிழ்ச்சி யடைந்து கொண்டிருந்தார்கள் இருக்குமிடம் தெரியாமல் மணக்கும் பூவைப் போல் வெளியிலே தெரியாமல் அமைதியோடிருந்தது அந்த மகிழ்ச்சி 'நந்தகோபர் தம்முடைய புதல்வருக்கு இன்னும் பெயர் சூட்டவில்லையே'—என்ற கவலை வசுதேவருக்கு ஏற்பட்டது. புலமை மிக்கவரும், பேரறிஞருமாகிய கார்க்கேய முனிவரை அழைத்து, ''நீங்கள் கோகுலத்திற்குப் போய் நந்தகோபரின் வீட்டில் வளரும் சிறுவனுக்கு ஏற்ற ஒரு நற்பெயரைத் தேர்ந்தெடுத்துச் சூட்டி விட்டு வாருங்கள்'—என்று அனுப்பினர் வசுதேவர். கார்க்கேய முனிவர் பெருநிதியம் பெற்றவர் போல் உவகை கூர்ந்தார். நந்தகோபர் சிறுவனின் அழகையும், இளம் பருவத்திலேயே அவன் செய்த விந்தைச் செயல்களைப் பற்றியும், கேள்விப் பட்டு அவனைப் பார்க்க வேண்டுமென்று முனிவர் ஆவலோடு இருந்தார். இப்போது வசுதேவரே கூறியனுப்பியதால் அந்த ஆவல் இருமடங்காயிற்று.

கார்க்கேய முனிவர் கோகுலத்திற்குப் போனர். நந்தகோபர் முதலியவர்கள் அவரை மரியாதையாக எதிர் கொண்டு வரவேற்றனர் முனிவர் நாள், கோள், நட்சத்திரங்களை நன்கு

ஆராய்ந்து சிறுவனுக்குப் பெயர் வைத்தார். வசுதேவரின் மற்ரோர் மனைவியாகிய ரோஹிணி கோகுலத்தில் இருந்தாள். முன்பு தேவகியிடமிருந்து பிரித்துச் சேர்த்த ஏழாவது கர்ப்பத்தினுல் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்து வளர்ந்துகொண்டிருந்தான். இந்தக் குழந்தைக்கும், நந்தகோபரின் குழந்தைக்கும், பெயர் வைப்பதற்காகத்தான் கார்க்கேய முனிவர் வந்திருந்தார். இவ்விரு குழந்தைகளில் ரோஹிணியின் குழந்தை வயதால் மூத்தது அவனுக்கு பலராமன் என்றும் நந்தகோபரின் சிறுவனுக்குக் கண்ணன் என்றும் பெயர் வைத்தார் கார்க்கேய முனிவர். கண்ணனை வாசுதேவன் என்றும், பலராமனை இராமனென்றும் கூட அழைக்கலாமென அவர் கூறிச் சென்ருர் சிறுவர் இருவரும் வளர வளரக் கோகுலத்தில் மகிழ்ச்சியும், கொண்டாட்டமும், குறைவின்றி வளர்ந்தன. அந்த இளம் வயதில் கண்ணனுடைய பாலப் பருவத்துத் திருவிளையாடல்கள் தொடங்கின கண்ணனின் சிறு பருவத்து விளையாட்டுக்கள் குறும்பு நிறைந்தனவாயிருந்தன. கோகுலத்துப் பெண் மக்கள் அவன் விளையாட்டுக்களால் மகிழ்ச்சி அடைந்தார்கள்

பால் கறப்பதற்காகக் கன்றுகளை ஊட்டச் செய்த பின்தறியில் கட்டி விட்டுப் பால் கறந்து கொண்டிருப்பார்கள். அந்தச் சமயத்தில் கண்ணன் ஓசைப்படாமல் பின்புறமாக வந்து கன்றுகளைக் கட்டுத்தறியிலிருந்து அவிழ்த்து விட்டு விடுவான். கன்றுகள் பாலைப் பருகி விட்டு வீட்டில் அங்கும் இங்கும் ஓட்ட மெடுக்கத் தொடங்கிவிடும். கன்றுகள் எப்படித் தாமாகக் கட்டுத்தறியிலிருந்து அவிழ்த்துக் கொண்டு வந்தன? என்று புரியாமல் வீட்டிலுள்ளவர்கள் திகைத்துப் போய் நிற்கும் போது கண்ணன் அவர்களுக்கு முன்ஞல் வந்து கை கொட்டிச் சிரிப்பான்.

வீட்டில் உயர்ந்த இடத்தில் பரண்கட்டி உறியில் தயிர், மோர், வெண்ணெய், பால் சட்டிகளை வைத்திருப்பார்கள்.

கோகுலத்துச் சிறுவர்களை ஒருவர் மேல் ஒருவராகக் குனிய வைத்துக் கண்ணன் அவர்கள் முதுகின் மேல் ஏறிநின்று உறி யிலிருந்த பால், தயிர், வெண்ணெய் எல்லாவற்றையும் காலி செய்து விடுவான். பானைகளைக் காலி செய்ததும் அவற்றை முற்றத்திலுள்ள மரத்தடியில் குரங்குகள் விளையாடிக் கொண் டிருக்கும் இடத்தில் கொண்டு போய் விடுவான் குரங்குகள் பானைகளைத் தடவி உருட்டத் தொடங்கிவிடும். உடனே அந்த வீட்டுப் பெண்களையெல்லாம் அழைத்துக் கொண்டு வந்து, "இதோ பார்த்தீர்களா? உங்கள் வீட்டு உறியிலிருந்த பானைகளையெல்லாம் இந்தக் குரங்குகள் திருடிக் கொண்டு வந்து இங்கே தின்று விட்டு இப்படி உருட்டுகின்றன"- என்று குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டே கூறுவான் கண்ணன்.

குனிய வைத்து ஏறி உறிகளைத் திருடி உண்பதற்கு வசதி இல்லையானால் கற்களை எடுத்து உறிப்பானைகளின் மேல் வீசி எறிந்து அவை துளைபட்டு உடைந்து ஒழுகும் போது பால், தயிர் முதலியவற்றைக் கண்ணன் ஏந்திக் குடிப்பான். கோகுலத்திலுள்ள மற்றச் சிறுவர்களை அடித்து, உதைத்து, அழச் செய்வான்.

வெண்ணெய், பால் முதலியவற்றைத் திருடி உண்டு விட்டு நின்று கொண்டிருக்கும் போது யாராவது வந்து கையும், களவுமாகப் பிடித்து விட்டால் தான் உண்ட மீதத் தைக் கண்ணன் அவர்கள் வாயில் பூசி விடுவான். கோகுலத்தின் நான்கு எல்லைகளுக்குள் அந்த மாயச் சிறுவன் புரிந்த விளையாடல்களுக்கு ஓர் அளவே இல்லை. ஒரு நாள் கூடிலந்து கோகுலத்துப் பெண்களாகச் சேர்ந்து கண்ணனைக்

கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு யசோதையிடம் சொல்லித் தண்டிப்பதற்காகச் சென்றூர்கள். போய்க் கொண்டேயிருக்கும்போது அவர்கள் பிடியிலிருந்து கண்ணன் மாயமாய் மறைந்து விட்டான். அவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. நாலைந்து பெண்களாகச் சேர்ந்து இப்படிக் கையும் களவுமாய்ப் பிடித்துக் கொண்டு வரும்போதே தப்பிப் போய் விட்டானே!'' என்று வியப்போடு யசோதையின் வீட்டிற்குள் நுழைந்தார்கள் அவர்கள்.

அங்கே யசோதை கண்ணனைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். ஒன்றும் தெரியாத சாதுப் பிள்ளை போல் குளித்துக் கொண்டிருந்தான் கண்ணன். 'தங்கள் கையிலிருந்து தப்பிய அவன் அதற்குள் எப்படி மாயமாய் வீட்டுக்குள் வந்து சேர்ந்திருக்க முடியும்?'—என்று அவர்களுக்குப் புரியவில்லை!

மற்ரேர் சமயம் இதையெல்லாம்விடப் பெரிய விந்தை நிகழ்ச்சியொன்று நிகழ்ந்தது தெருவில் தன் வயதையொத்த சிறு நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருந்த கண்ணன் மண்ணை அள்ளித் தின்ருன். அதைப் பார்த்த மற்ற சிறுவர்கள் கண்ணனின் தாயாகிய யசோதையிடம் ஓடி வந்து, ''உங்கள் பிள்ளை, தெருப் புழுதியை அள்ளித் தின்கிருன். நாங்கள் எவ்வளவோ சொல்லி தடுத்துப் பார்த்தோம். கேட்கவில்லை'' என்று கூறினூர்கள். உடனே யசோதை தெருவிற்கு ஓடிப் போய்க் கண்ணனை வீட்டிற்குள் இழுத்துக் கொண்டு வந்தாள். ''குழந்தை எவ்வளவு மண்ணைச் சாப்பிட்டானே? வயிற்றுக்குள்ளே போய் ஏதாவது கோளாறு செய்யப் போகிறதே'' என்றெண்ணிக் கவலையோடு அவனுடைய சிறு வாயைத் திறந்து பார்த்தாள் யசோதை.

திறந்து பார்த்தவள் திகைத்துப் போய் நின்ருள். யசோதையின் கண்கள் அகல விரிந்தன. சிறுவனின் திறந்த வாய்க்குள் அண்ட சராசரங்களையும் கண்டு பிரமித்துப்

போய் நின்றாள் அவள். ஈரேழு பதினான்கு புவனங்களும் கடலும், வானமும், சூரிய சந்திரர்களும், —எல்லாம் சிறுவனு டைய செம்பவழ இதழ்களுக்குள்ளே கண்டு மலைத்துப் போனாள் யசோதை.

அவளுக்கு விளையாட்டுக் காட்டிவிட்டு வாயை மூடிக் கொள்கிறவன்போலக் கண்ணன் வாயை மூடிக்கொண்டான். யசோதை அப்படியே குழந்தையை வாரித் தழுவி எடுத்துக் கொண்டாள். அவன் தன் சிறுவன், தாம் பெற்ற பிள்ளை— என்பதெல்லாம் மறந்து 'அவன் தெய்வம்'—என்ற உணர்ச்சி தன்னையறியாமலே அவளுக்கு ஏற்பட்டது. அவனைத் தொட்டுத் தழுவி எடுக்கும்போது பாதாதிகேச பரியந்தம் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது அவளுக்கு.

"இவன் சாதாரணச் சிறுவனில்லை. தெய்வீக அம்சங்க ளெல்லாம் வாய்க்கப் பெற்றவன். கோகுலத்தில் நமக்கு மட்டும் உரிய பிள்ளையாக இவன் வந்து பிறந்திருக்கவில்லை. உலகுக்கே உரிய புதல்வனாக இவன் வந்து பிறந்திருக்கிறான். இவனால் மாபெரும் காரியங்களெல்லாம் இந்த உலகில் நடைபெற வேண்டியிருக்கின்றன"—என்று யசோதையின் மனத்தில் தோன்றிற்று. நந்தகோபர் முதலியவர்களிடமும் இந்த நிகழ்ச்சியைப் பெருமிதத்தோடு எடுத்துக் கூறினாள் அவள்.

"யசோதை! நீ நினைப்பது சரிதான். இவன் உனக்கும் எனக்கும் வெறும் குழந்தையாக வந்து பிறக்கவில்லை. இவன் பெரிய காரியங்களைச் செய்வதற்காக அவதரித்திருக்கிறான். இப்போது எவ்வளவுக்கெவ்வளவு குறும்புகளும், விளையாடல் களும் புரிகிறானோ; அவ்வளவுக்கவ்வளவு எதிர்காலத்தில் மாபெரும் காரியங்களை இவன் சாதிக்கப் போகிறான் பார்" என்று நந்தகோபரும் அவளிடம் கூறினார்.

(தொடரும்)




# 19. புதுத் தொழில்

வேரற்ற மரம் போல் தமது திருவடிகளில் விழுந்து கிடந்த வில்லிதாசனை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்றார் வையகம் வாழ்விக்க வந்த கருணை வள்ளல் உடையவர். பிறகு குனிந்து தமது இருகைகளாலும் வில்லிதாசனை மெள்ளப் பிடித்துத் தூக்கி நிற்கவைத்தார். அவரை மேலும் தனது பிரமை பிடித்த கண்களால் நோக்கினான் தனுர்தாஸன். சதா தேகப் பயிற்சியால் திண்மையும் வன்மையும் கனமும் மிக்க தனது சரீரத்தை தூய்மையான துறவறத்தாலும் காயக்கிலேசத்தாலும் வயோதிகத்தாலும் தளர்ந்து கிடந்த திருமேனியை உடைய அந்த சந்நியாசி எப்படித் தூக்கமுடிந்தது, என்று எண்ணியதால் விவரிக்க இயலாத வியப்புக்குள்ளானான் தனுர்தாஸன். அதை வாய் விட்டும் கேட்டான். ''ஸ்வாமி! இந்த மாமிச பிண்டத்தைத் தங்களால் எப்படித் தூக்க முடிந்தது?'' என்று.

உடையவர் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''அப்பா! சக்தி மனத்திலிருந்து உண்டாகிறது, தேகத்திலிருந்து அல்ல. சக்தியை வளர்ப்பது நாமல்ல, அவன்'' என்று அழகிய மணவாளனைச் சுட்டிக் காட்டினார் எம்பெருமானார்.

தனுர்தாஸன் மீண்டும் சிந்தித்தான் சில விநாடிகள். ''ஸ்வாமி! தாங்கள் கூறும் சக்தியைப் பெற மந்திரம்

ஏதாவது இருக்கிறதா!'' என்று கேட்டான் சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு.

''இருக்கிறது'' என்றார் எம்பெருமானார் சாந்தம் நிரம்பிய குரலில்.

''அதை எனக்குச் சொல்லித் தருகிறீர்களா?'' என்று குழந்தை போல் கெஞ்சினான் வில்லி.

''சொல்லித் தருகிறேன்''. உடையவர் பதில் உடனடியாக வெளியே வந்தது.

''மந்திரம் ரகசியம் என்று சொல்கிறார்களே?''. வில்லிதாஸன் சந்தேகத்துடன் வினவினான்.

''ஒரு காலத்தில் அப்படித்தானிருந்தது. அது திருக்கோஷ்டியூரில் உடைந்து விட்டது. அதை யாரும் கற்கலாம். சொல்லலாம்''.

''மிகவும் கஷ்டமான மந்திரமா ஸ்வாமி?''

''இல்லை. மிகச் சுலபமானது. எட்டே எழுத்துக்கள் கொண்டது''.

''எட்டு எழுத்துக்களில் அத்தனை சக்தி அடைந்திருக்கிறதா?''

''ஆமாம்''

வில்லிதாஸன் மறுபடியும் உடையவர் திருவடிகளில் விழமுயன்றான். உடையவர் அவனைத் தமது இருகைகளாலும் பற்றி நிறுத்தினார். வில்லிதாஸன் விழிகளில் துன்பத்தின் சாயை படர்ந்தது. ''ஏன் ஸ்வாமி! இன்னொரு முறை நான் சேவிக்கக் கூடாதா?'' என்று கேட்டான் துன்பத்தின் சாயை குரலிலும் படிய.

உடையவர் தமது திருக்கைகளால் அவன் இருதோள் களையும் பற்றிய வண்ணம் சொன்னார், ''சேவிக்கலாம். ஆனால் நீ ஒரு முறை சேவிக்கும் போதே நான் கடனாளியாகி விட்டேன். இரண்டாம் முறை சேவித்தால் கடனை எப்படித் தீர்ப்பேன்?'' என்று.

''நீங்கள் சொல்வது விளங்கவில்லை ஸ்வாமி'' என்றான் தனுர்தாஸன் குழப்பத்துடன்.

உடையவர் அவனை ஒரு முறை நோக்கினார். ''வில்லி தாஸா! உன் கைகளைக் கூப்பிக் கொண்டு பெருமாளைப் பார்'' என்று சொன்னார்.

அப்படியே செய்தான் வில்லிதாஸன். |''இரண்டு முறை கள் கைகளைத் திரும்பத் திரும்பக் கூப்புகிறேமா?'' என்று கேட்டார் உடையவர்.

''இல்லை ஸ்வாமி''

''ஏன் தெரியுமா?''

''சொல்லுங்கள் ஸ்வாமி''

''நீ செய்ததற்கு அஞ்சலி என்று பெயர்''

''கேட்டிருக்கிறேன் ஸ்வாமி''

''அம் ஜலயதி இதி அஞ்சலி என்று அந்த சொல்லைப் பிரிக்கிறார்கள் பெரியவர்கள். நீ கைகூப்பியவுடன் அகார வாச்யனை எம்பெருமான் கருணையால் ஜலமாக உருகிவிடு கிறான். உனக்குக் கடனாளியாகிவிடுகிறான். உன் சுகதுக்கங் களை அவன் சுமக்கிறான். அப்படியிருக்க அவனை மேலும் கடனாளியாக்கலாமா?'' இப்படிக் கேட்ட ராமானுஜர் ''அப்படித்தான் சேவையும். ஒருமுறை சேவித்தால் போதும். எத்தனை முறை சேவித்தாலும் பலன் முதல் சேவையில் கிடைப்பது தான். ஆகையால் வில்லிதாஸா! நீ என்னை சேவித்தது போதும். வா

போவோம்'' என்று சந்நிதியை விட்டு நடக்கு முற்பட்டார்.

வில்லிதாஸன் அசைவில்லை. ''ஒரு சந்தேகம்'' என்றான்.

''என்ன?''. திரும்பியவண்ணம் கேட்டார் எம்பெருமானார்.

''தாங்கள் என்னைத் தொட்டுத் தூக்கி விட்டீர்கள்'' என்று சொன்ன வில்லிதாஸன் குரலில் துன்பமிருந்தது. குற்றம் புரிந்தவன் குரலாகவும் தெரிந்தது.

''அதனாலென்ன?'' என்று கேட்டார் உடையவர்.

''நான் கீழ்க்குலத்தவன்'' என்று விளக்கினான்.

உடையவர் இதழ்களில் மந்தகாசம் விரிந்தது. ''வில்லிதாஸா, அதோ எம்பெருமானுக்குப் பக்கத்தில் நிற்பவர் யார் தெரியுமா?'' என்று வினவினார் பக்திப் பிரவாகம் குரலில் பாய்ந்தோட.

''தெரியாது ஸ்வாமி!'' என்று தனுர்தாஸன் தனது அறியாமையைக் காட்டினான்.

''அவர் தான் திருப்பாணாழ்வார். பஞ்சமர். அவரை தோளில் தூக்கி வரும்படி பெருமான் லோகசாரங்க முனிவர் என்ற அந்தணருக்குக் கட்டளையிட்டார். அப்படி வந்தவர் எம்பெருமான் கண்களைப் பார்த்தார். வேறொன்றைப் பார்க்காமல் இங்கேயே மோக்ஷமடைந்தார். ஆகையால் பகவான் தனது அடியார்களின் முகத்தைப் பார்ப்பதில்லை. குணத்தைப் பார்க்கிறான், மனப்பக்குவத்தைப் பார்க்கிறான். பக்தியைப் பார்க்கிறான்'' என்று கூறிவிட்டு கர்ப்பக் கிரகத்திலிருந்து வெளியே நடந்தார். வில்லிதாஸனும் பின் தொடர்ந்தான். வெளியே கருட மண்டபத்தில் பொன்னாச்சி ஆண்டாளுடன் நின்றிருந்தாள். அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் எம்பெருமானாரைப் பின்பற்றி நடந்தான் வில்லிதாஸன்.

பொன்னாச்சி தனது பக்கத்தில் நின்ற ஆண்டாளைக் கவனித்தாள். பிறகு அவர்கள் இருவரும் உடையவரையும் வில்லிதாஸனையும் பின் தொடர்ந்தனர். எம்பெருமானார் தமது மடத்துக்கு வந்ததும் வில்லிதாஸனை ஏறெடுத்தும் பார்க்காமல் உள்ளே சென்றார். வில்லிதாஸன் வாயிலிலேயே திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். பொன்னாச்சி அவனை நெருங்கிய போது அவன் பிரமை பிடித்த முகத்தைப் பார்த்தாள். ''ஏனிப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் மதுரமான குரலில்.

ஏதும் பதிலில்லை அவள் கேள்விக்கு. ஆகவே இரண்டாவது முறை கேட்டாள் ''அரசமாளிகையில் வேலைக்குப் போக வேண்டாமா?'' என்று.

அவள் கண்களைக் கண்டு சதா மயங்கிய வில்லிதாஸன் இடித்தபுளி போல் உட்கார்ந்திருந்தான். பிறகு மெள்ள சொன்னான் ''போக வேண்டாம்'' என்று.

''ஏன்!'' பொன்னாச்சியின் குரல் குழப்பத்துடன் ஒலித்தது.

''எனக்கு இனிமேல் இருப்பிடம் இதுதான்'' வில்லிதாஸன் பதில் திட்டமாக இருந்தது.

''அப்படியானால் தொழில்?''

''இருக்கிறது''

''புதுத் தொழிலா?''

''ஆம்''

''அது என்னவோ?''

''எம்பெருமானாருக்கு அடிமையாயிருப்பது'' என்ற வில்லிதாஸன் ''நீ வேண்டுமானால் வீட்டுக்குப் போ'' என்றான்.

பொன்னாச்சி தீர்க்க சிந்தனையில் இறங்கினாள். பிறகு அவன் காலடியில் உட்கார்ந்தாள். (தொடரும்)

# அன்புள்ள ஸ்ரீதாசார்யரே!

**அப்பு சடகோபாசாரியார்** — **ஆழ்வார்திருநகரி.**

பங்குனிச் சிறப்பிதழைக் கண்ணுற்று களிபேருவகை எய்தினேன். ''அடியேனை ஆட்கொண்ட அண்ணா''வைப் படிக்கையிலே கண்கள் குளமாயின. Dr. V. V. R. ஸ்வாமியின் கட்டுரை அபாரம், அற்புதம் என்றிவ்வளவு தான் சொல்ல முடியும்.

**திருமதி சாரு** — **மன்னார்குடி.**

P. B. A. ஸ்வாமி தவறில்லாமல் Proof பார்க்கக் கற்றுக் கொடுத்தார்கள் என்று ''அடியேனை ஆட்கொண்ட அண்ணா''வில் எழுதிவிட்டு Dr. V. V. R. எழுதியுள்ள வைபவக் கட்டுரையில் (பக்கம் 39ல்) 1974 என்பதற்கு 1994 என்று அச்சிட்டிருக்கிறீர்களே!

**ரங்கநாதன்** — **மாயவரம்.**

ஸ்ரீ உ. வே., மஹாவித்வான் **P. B. A.** ஸ்வாமியின் அரையர் திருக்கோலப் படம் அருமையிலும் அருமை. இது நாள் வரை வெளிவந்த ஸ்ரீதாசார்யன் இதழ்களுக்கெல்லாம் கிரீடம் வைத்து போலிருந்தது பங்குனிச் சிறப்பிதழ்.

**பார்த்தசாரதி** — **சென்னை.33**

பங்குனிச் சிறப்பிதழ் அற்புதமாக இருந்தது வாஸ்தவம் தான். ஆனால் அதற்காக, வழக்கமாக இடம் பெறும் 'கேள்வி பதில்' 'வாசகர் கடிதம்' 'செய்திகள்' ஸ்தலசயனத் துறைவார் கட்டுரை போன்ற சுவையான பகுதிகளை நிறுத்தியது நியாயமா? இனியும் இப்படிச் செய்யாதீர்!